பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 138

ஞாயிற்றுக்கிழமை
13 ஏப்ரல் 2025

பங்குனி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

கீரிமலையில் வெடிகுண்டுகள் **மீட்பு**

» 03

# திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றும் பெரும் போராட்டம்!

## வவுனியாவில் இருந்தும் பெருமளவானோர் பங்கெடுப்பு

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 13**

**யாழ்ப்பாணம் - தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் காணி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளை, உரிமையாளர்களிடம் மீளவும் வழங்குமாறு வலியுறுத்தி பூரணை நாளான நேற்று மீண்டும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

15

## எம்மைத்தவிர வேறு எவராலும் நாட்டை மேம்படுத்தமுடியாது!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, ஏப்ரல் 13
நாட்டின் தேசியப் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு எமக்கு பல தசாப்தங்களுக்கு பின்னர் வாய்ப்புக் கிட்டியுள்ளது. நாம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறோம். எம்மைத் தவிர வேறு எவராலும் அதனைச் செய்யமுடியாது இவ்வாறு ஜனாதிபதி அநுர

15

### 16 சிறுவர்கள் துஷ்பிரயோகம்

## விளையாட்டுப் பயிற்சியாளரை கைதுசெய்ய நடவடிக்கைகள்!

### கிளிநொச்சி பொலிஸார் உறுதி

கிளிநொச்சி, ஏப். 13
கிளிநொச்சியில் 16 சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கும், துன்புறுத்தலுக்கும் உட்படுத்திய விளையாட்டுப் பயிற்சியாளர் மிகவிரைவில் கைதுசெய்யப்படுவார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் கிளிநொச்சிப் பொலிஸார் உறுதியளித்துள்ளனர்.

15

## வலிகாமத்தின் அபிவிருத்தியை நிச்சயம் உறுதிசெய்வோம்!

### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 13
வலிகாமம் பகுதியின் அபிவிருத்தி நிச்சயம் உறுதிசெய்யப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.
வலிகாமம் மேற்குப்பிரதேசசபைக்கான வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே

15

## வடக்கு முதலீட்டு வலயங்களில் முதலிடுவதற்கு முன்வாருங்கள்!

### யாழ்ப்பாண வணிகர் கழகம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13
மிகக்குறுகிய காலத்தில் வடமாகாணத்தில் உருவாக்கப்படவுள்ள மூன்று முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் முதலிடுவதற்கு முன்வருமாறு, வடமாகாண முதலீட்டாளர்களுக்கும், வடமாகாணத்தைச் சேர்ந்த புலம்பெயர் முதலீட்டாளர்களுக்கும் யாழ்ப்பாண

15

## இலங்கைப் பொருளாதாரம் 3.9 வீதம் வளர்ச்சியடையும்

### ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கை

கொழும்பு, ஏப்ரல் 13
இலங்கையின் பொருளாதாரம் இந்த வருடத்தில் 3.9 வீதம் வளர்ச்சியைப் பதிவுசெய்யும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி கணித்துள்ளது.
இது தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான சிரேஷ்ட பொருளியலாளர் லிலியா அலெக்

15

### தமிழில் தண்டப்பத்திரம் கோரியவரை

## கழுத்தைப் பிடித்து இழுத்து கைதுசெய்தனர் பொலிஸார்!

### வவுனியாவில் அட்டூழியம்



வவுனியா, ஏப். 13
வவுனியா குருமன்காடு சந்தியில், வவுனியா போக்குவரத்துப் பொலிஸாரின் நடவடிக்கையின்போது தமிழில் தண்டப்பத்திரம் கோரிய நபரை கழுத்தைப் பிடித்து இழுத்து பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
சம்பவம் தொடர்பில் தெரிய

15

## விபத்தில் முதியவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 13
யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் பாடசாலைக்கு அருகில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
கந்தவனம் செல்வநாயகம் (வயது-62) என்ற முதியவரே இவ்வாறு


15



முச்சந்தி முரளி

'விகாரைப் பிரச்சினைதான் இப்ப விகாரமான விவகாரமாகி நிக்குது கண்டியளோ'

## வடமராட்சியில் விபத்து; குடும்பத்தலைவர் பலி!



யாழ்ப்பாணம், ஏப். 13
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில், நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கோரவிபத்தில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்

15

# சஞ்சீவி


மக்கள் ம... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 12.04.2025 | திகதி 12.04.2025 | திகதி 12.04.2025 | திகதி 12.04.2025 | திகதி 12.04.2025 | திகதி 12.04.2025 | திகதி 12.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4046 | சீட்டிழுப்பு இலக்கம் 1113 | சீட்டிழுப்பு இலக்கம் 072 | சீட்டிழுப்பு இலக்கம் 2152 | சீட்டிழுப்பு இலக்கம் 5804 | சீட்டிழுப்பு இலக்கம் 1834 | சீட்டிழுப்பு இலக்கம் 0379 |
| ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கினம் மிதுனம் | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து L | ஆங்கில எழுத்து U | ஆங்கில எழுத்து L |
| | | | சுப்பர் இலக்கம் 21 | | | |
| வெற்றி இலக்கங்கள் 07 12 28 57 | வெற்றி இலக்கங்கள் 19 29 36 48 | வெற்றி இலக்கங்கள் 6 5 9 3 | வெற்றி இலக்கங்கள் 13 39 50 66 | வெற்றி இலக்கங்கள் 5 8 4 6 8 6 | வெற்றி இலக்கங்கள் 07 08 22 54 | வெற்றி இலக்கங்கள் 4 6 8 6 |
| விசேட எழுத்து U | | | | | விசேட எழுத்து U | |

# இந்து மக்களின் மனங்களை கீறிக்காயப்படுத்தினார் பிரதமர்

## சட்டத்தரணி ஸ்ரீகாந்தா ஆதங்கம்



**யாழ்ப்பாணம், ஏப். 13**

**யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த பிரதமர் இந்துமத மக்களின் உணர்வுகளைக் கீறிக் காயப்படுத்தியுள்ளார். அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 6ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போது தேர்தல் சட்டம் நடைமுறையிலுள்ளது. தேர்தல் சட்டங்களைக் கடைப்பிடிக்குமாறு தேர்தல்திணைக்களம் சகல கட்சிகள், சுயேச்சைக் குழுக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பிரதமர் ஹரிணி அமர சூரிய கலந்துகொண்டார். அவர் கலந்துகொண்ட தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது. ஆலயத்தினுள் அதிரடியாக பாதுகாப்பு அதிகாரிகள் புகுந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் வழிபாட்டுக்கு இடையூறு விளைவித்துள்ளனர்.

பிரதமரின் பாதுகாப்புக்காக வந்தவர்கள், காலணிகளோடு ஆலய வளாகத்தில் புகுந்துள்ளார்கள். அது இந்துமக்களுக்கு மிகப் பெரிய மனவுளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. இந்த மலிவான அரசியலுக்கு நாம் கடுமையான கண்டனங்களைத் தெரிவிக்கிறோம். இந்து மக்களின் உணர்வுகளைக் கீறிக்காயப்படுத்தியுள்ள பிரதமர், தனது செயலுக்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

அதேபோன்று காறைநகர் மற்றும் நீர்வேலிப் பகுதியில் ஆலய வளாகத்தில் மேடை அமைத்து , தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பிரதமர் ஈடுபட்டிருந்தார்.

வடக்கை நோக்கி பல அரசியல்வாதிகள் உள்ளூராட்சித் தேர்தலுக்காகப் படையெடுத்து வருகின்றனர். அவர்கள் தங்கள் அரசியல் நடவடிக்கைகளை மதத் தலங்களில் மேற்கொள்ள வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம். தேர்தல் விதிமுறைகள் மீறல்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகள் தமது கடமைகளைச் சரியாக மேற்கொள்ளவேண்டும்- என்றார். (ச-26)

## சுபிரி தன சம்பத

வெற்றி வாரம்: 0512

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 12.04.2025 | சனிக்கிழமை | C | 2 6 2 2 7 5 |

## Super Ball

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 12.04.2025 | சனிக்கிழமை | 2778 | W | 09 19 30 79 |

## சனிதா

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 12.04.2025 | சனிக்கிழமை | D | 03 04 52 79 | 4939 |

## SASIRI

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 12.04.2025 | சனிக்கிழமை | 0663 | 19 26 41 |

## லக்ன ராசி

| திகதி | தினம் | கடகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 12.04.2025 | சனிக்கிழமை | | 19 28 47 59 | 4490 |

## KAPRUKA

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 12.04.2025 | சனிக்கிழமை | Z | 11 | 21 37 59 73 | 1954 |

## அத கோடிபதி

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 12.04.2025 | சனிக்கிழமை | Z | 19 31 70 75 | 2604 |

இதுவரை

# ஒரு கோடியே 10 இலட்சம் வாக்குச்சீட்டுகள் அச்சிடல்

கொழும்பு, ஏப்.13

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை முன்னிட்டு ஒரு கோடியே 10 இலட்சம் வாக்குச்சீட்டுகள் இதுவரை அச்சிடப்பட்டுள்ளன என்று அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அரச அச்சகர் பிரதீப் புஷ்ப குமார கூறுகையில்,

14 நிர்வாக மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்குள் நிறைவடையும் - என்றார். (ச-இ)

# அபிவிருத்திகளை அடைய எங்களுக்கு வாக்களியுங்கள்

## தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாநகர வேட்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

எங்களுடைய பிரதேசங்களில் அபிவிருத்தியை மேற்கொள்ள எமக்கு வாக்களியுங்கள் என்று யாழ்.மாநகரசபையின் மேஜர் வேட்பாளர் கபிலன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் நடைபெற்ற வேட்பாளர் அறிமுக விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.நூலகத்தைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நூலகமே மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. கடந்த 75 வருட அபிவிருத்தி எங்களுக்கு எதனைத் தந்திருக்கின்றது . உங்களுடைய கிராமம் சார்ந்து செயற்படவேண்டிய உள்ளூராட்சி சபைகள் உங்களுக்கு எதனைத் தந்திருக்கின்றது.

எமது வளத்தை நாம் சரியான வகையில் முகாமை செய்யத் தவறியிருக்கின்றோம் . அதன் விளைவாக நாம் குடிதண்ணீரில் பெரும் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றோம். இன்று எங்களுடைய பிரதேசத்தில்விவசாய சந்தை இருக்கின்றது. ஆனால் அதனைத்தீர்மானிக்கின்ற உரிமை எங்களுடைய கைகளில் இல்லை. விவசாயிகளின் வாழ்வியல் கடந்த காலங்களில் கேள்விக்குட்பட்டதாகவே இருந்தது .

ஒரு பிரச்சினையை நீங்கள் பிரதேசசபை உறுப்பினர்களிடம் சொல்லுகின்றபோது மத்தியில் இருப்பவர்கள் எங்களுக்கு முரணானவர்கள் எனத் தெரிவித்து உங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடச் சொல்லுகின்றார்கள். ஆனால் இனி அப்படிச் சொல்ல[illegible] மக்களின் கைகளிலேயே இது தங்கியுள்ளது- என்றார். (ச-25)

# எட்கா ஒப்பந்தத்தை அரசு துரிதப்படுத்துக

## ரணில் கோரிக்கை

கொழும்பு, ஏப். 13


இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் பணிகளை அரசாங்கம் துரிதப்படுத்தவேண்டும். இதனூடாக தென்னிந்தியப் பிராந்தியத்தின் அபிவிருத்தி அடைந்த துறைமுகமாக திருகோணமலைத் துறைமுகம் வளர்ச்சி அடையும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாயக முன்னணியின் விசேட சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்க சந்தைகளைத் தவிர புதிய சந்தை வாய்ப்புகளை இலங்கை கண்டறியவேண்டும். ஆடை ஏற்றுமதியை மாத்திரம் நம்பியிருப்பதால் எவ்விதமான பயனும் ஏற்படப்போவதில்லை. இவ்வாறான சவால்களை முன்கூட்டியே அறிந்து தான் பொருளாதார மறுசீரமைப்பு சட்டங்கள் எமது ஆட்சியில் கொண்டுவரப்பட்டன. ஆனால், அவை தற்போதைய அரசாங்கத்தினால் இன்று நடைமுறைப்படுத்தப்படுவதில்லை - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சாவகச்சேரி

## சந்தைக் கட்டடத்திலிருந்து அகன்றனர் படையினர்

யாழ்ப்பாணம், ஏப்.13

சாவகச்சேரி நகரசபை நவீனசந்தை கட்டட இரு அறைகளில் தங்கியிருந்த படையினர் நேற்றுமுன்தினம் அங்கிருந்து விலகிச்சென்றுள்ளனர்.

கடந்த 1996 ஆம் ஆண்டு சாவகச்சேரி நகரை கைப்பற்றியவேளையில் தனங்களப்பு வீதியில் அமைக்கப்பட்டிருந்த முகாமுக்குக் காவலரணாக போர் வேளையில் சேதமடைந்த கட்டடத்தில் தங்கியிருந்தனர். இந்தக் கட்டடம் புனரமைக்கப்பட்ட பின்னர் இரு அறைகளில் தங்கியிருந்தனர்.

அதனால் கட்டடத்தில் உள்ள 26 கடை அறைகளும் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

நகரசபையில்

## கழிவுகளுக்கு வைத்த தீ; தென்னைகள் நாசமாகின!

குடத்தனைப் பகுதியில் கொட்டப்பட்ட கழிவுகளுக்கு வைக்கப்பட்ட தீ அருகிலிருந்த தென்னைகளுக்குப் பரவியதில் நூற்றுக்கும் மேற்பட்ட தென்னைகள் தீயில் எரிந்து கருகியுள்ளன.

பருத்தித்துறை நகரசபையால் குறித்த பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதால் தமது விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக குடத்தனைக் கமக்காரர்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதையடுத்து குறித்த பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாக பருத்தித்துறை நகரசபையால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொட்டப்பட்ட கழிவுகளுக்கு தீ வைக்கப்பட்ட நிலையில் தீ காற்றில் பரவி பல ஏக்கர் நிலங்களிலிருந்த தென்னை, பனைகளை நாசம் செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-41-27)



## வெடிகுண்டுகள் கீரிமலையில் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

கீரிமலையில் நேற்று சனிக்கிழமை வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கீரிமலையில் ஜனாதிபதி மாளிகைக்குச் செல்லும் வழியிலுள்ள நாராயணசுவாமி ஆலய அருகாமையிலுள்ள கிணறு ஒன்றினைத் துப்புரவுசெய்தபோதே சந்தேகத்துக்கிடமான பொருள்கள் அவதானிக்கப்பட்டன. இது குறித்து காங்கேசன்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியநிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மோட்டார் ஷெல் ஒன்றையும் கைக்குண்டு ஒன்றையும் அடையாளம் கண்டுள்ளனர். இதனையடுத்து அடையாளப்படுத்தப்பட்ட குண்டுகளை செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர். (ச-125,27)

இரவுவேளைகளில்

## கல்லுண்டாய் வீதியால் பயணிப்பதில் சிரமம்

யாழ்ப்பாணம், ஏப். 13

காக்கைதீவு தரம்பிரித்தல் நிலையம் மற்றும் கல்லுண்டாய் வெளி திண்மக்கழிவகற்றல் நிலையங்களில் இரவுநேரங்களில் கழிவுகளுக்குத் தீமூட்டப்படுவதால் குறித்த வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

மக்கள் வீதியை ஒழுங்காக அவதானிக்கமுடியாதும் சுவாசத்தை உள்ளீர்க்கமுடியாதும் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பயணிக்கின்றனர்.

கல்லுண்டாய் வெளியில் ஏற்கனவே எரியூட்டலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நீதிமன்ற உத்தரவைமீறி கழிவுகளை எரியூட்ட மாநகரசபைக்கு அனுமதி வழங்கியது யார்? என கேள்வியெழுப்பிய மக்கள் யாழ். மாநகரசபையின் பொறுப்பற்ற இந்தச் செயற்பாடு தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளைஎடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். (ச-125)

## யாழ்.பல்கலையில் பொன்விழா சங்கமம்

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பழையமாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் 'வேரிலிருந்து விழுது வரை இணையும் பொன்விழா சங்கமம்' நிகழ்வு எதிர்வரும் 26, 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆம் ஆண்டு பொன்விழாவை சிறப்பிக்கும் முகமாகவே இந்த நிகழ்வு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இதன்போது பண்பாட்டு நடைபவனி, குருதிக்கொடை நிகழ்வு, பொன்விழா மலர் வெளியீடு, ஓய்வுநிலைப் பேராசான்களையும் கல்விசாரா ஊழியர்களையும் கௌரவித்தல், கலைநிகழ்வுகள், விளையாட்டுகள், ஒன்றுகூடலும் இரவு விருந்துபசாரமும் உள்ளடங்கலான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சிறப்பு நிகழ்வாக எதிர்வரும் 26 ஆம் திகதி பொற்கலை மலர் வெளியீடு மற்றும் கௌரவிப்பு நிகழ்வும், 27 ஆம் திகதி வாகீசன் இசைக்குழுவினரின் வீணை வாத்திய பிருந்தா நிகழ்வும் 28ஆம் திகதி கலைமாமணி திருமதி கோபிகா வர்மா(தமிழ்நாடு) வழங்கும் மோகினி நடன நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் தாய்த்தேசத்திலுள்ள பழைய மாணவர்களையும் புலம்பெயர் நாடுகளிலுள்ள பழைய மாணவர்களையும் ஒன்றிணையுமாறும் விழா ஏற்பாட்டுக்குழுவினர் அழைப்புவிடுத்துள்ளனர். (ச-125)

## மாற்றுத்திறனாளிகளின் சாதனை கௌரவிப்பு

மன்னார், ஏப். 13

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய தடகள விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்ட மேலதிக செயலர் (காணி) க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தேசிய தடகள விளையாட்டுப் போட்டியில் குண்டெறிதல் போட்டியில் வெற்றியீட்டித் தங்கப்பதக்கம் பெற்ற தர்மலிங்கம் சிறிகாந், தட்டெறிதலில் தங்கப் பதக்கம் பெற்ற பாலச்சந்திரன் கிருசிகா ஆகியோரும் ஏனைய வெற்றிச் சான்றிதழ் பெற்ற 3 போட்டியாளர்களும் மற்றும் போட்டியில் பங்குபற்றிய வீர, வீராங்கனைகளும் கௌரவிக்கப்பட்டனர். (ச-66,9)







## மன்னார், கிளிநொச்சியில் கண்டற் தாவரங்கள் நடுகை

மன்னார், ஏப். 13

'உலகளாவிய சூழலியல் வசதி' எனும் செயற்றிட்டத்தின் கீழ் சூழலைப் பாதுகாக்கும் முகமாக கண்டற் தாவரங்களை மீள்நடுகை செய்யும் செயற்றிட்டம் கிளிநொச்சி, பூநகரி மற்றும் மன்னார் கீலிக்கரையான்பிட்டி சதுப்பு நிலப்பகுதிகளில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மன்னார், அடம்பன் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் முதற் கட்டமாக கண்டல் தாவரக் கன்றுகள் நேற்று மாலை வைபவரீதியாக நடப்பட்டன. குறித்த செயற்றிட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்ட கரையோரப் பகுதிகளில் சுமார் 7ஆயிரத்து 500 கண்டற் தாவரங்கள் நடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-56,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விஷயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். இளைய சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

**இடபம்:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை.

**மிதுனம்:** கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் அதிகரித்தாலும், பணியாளர்களால் வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** தேவையான பணம் இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்பட்டு கையிருப் பைக் குறைக்கும். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஒரு சிலருக்கு வாழ்க்கைத்துணைவழியில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டா கும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். குடும்பத்தில் அந்நியர்கள் தலையிடுவதை அனுமதிக்க வேண்டாம்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. பிற்பகலுக்கு மேல் மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம்:** தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் பணியாளர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** பிள்ளைகளின் பணிகளில் அவர்களுக்கு உதவி செய்வீர் கள். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட அவப்பெயர் நீங்கும். நீண்டநாள்களாகத் தொடர்பு கொள்ள முடியாமல் இருந்த நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள்.


**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் கிடைக்கும்.

**கும்பம்:** காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயல்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

பந்துவீச்சாளர்களுக்குத் துரோகத்தனமான ஆடுகளத்தில்

# ஹைதராபாத் நேற்று தாண்டவம்!



## பிரித்து மேயப்பட்டது பஞ்சாப்

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், பஞ்சாப் நிர்ணயித்த 246 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை, விரட்டி வென்றது ஹைதராபாத்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான பிரியான்ஸ் ஆர்யா மற்றும் பிரப்சிம்ரன் சிங் இருவரும் மிகச் சிறப்பாக விளையாடினார்கள். வெறும் நான்கு ஓவர்களில் அணி 66 ஓட்டங்களைப் பெற்றது. 13 பந்துகளில் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பிரியான்ஸ். அணித்தலைவர் ஸ்ரேயஸ் மிகச் சிறப்பாக விளையாடினார். அவர் 36 பந்துகளில் 82 ஓட்டங்களைக் குவித்தார். ஸ்ரொய்னிஸ் 11 பந்துகளில் 34 ஓட்டங்களைப்பெற 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது பஞ்சாப்.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு, ஆரம்ப வீரர்களான ஹெட் மற்றும் அபிஷேக் சர்மா இருவரும் ஆரம்பம்முதல் வாணவேடிக்கை காட்டினார்கள். 3 ஓவர்களில் 50 ஓட்டங்களை அணி தாண்டியது. அபிஷேக் சர்மா ஆட்டமிழந்த பந்தொன்று முறையற்ற பந்தாக அறிவிக்கப்பட்டது. பவிலியன் நோக்கி நடந்த அபிஷேக் சர்மா மீண்டும் திரும்பி வந்தார். கூடவே பஞ்சாப்புக்குத் தலைவலியும் வந்தது. சிக்சர்களும், பவுண்டரிகளும் மட்டும்தான் அவரின் இன்னிங்ஸின் நிறைந்திருந்தன. 7.3 ஓவர்களில் விக்கெட்களை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது ஹைதராபாத். அதன் பின்னரும் அதிரடி மின்னலாய் முழங்கியது. 12 ஓவர்களில் அணி 171 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டமிழந்தார் ஹெட். 40 பந்துகளில் சதம் கடந்தார் அபிஷேக் சர்மா. 55 பந்துகளில் 141 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அவர் ஆட்டமிழந்தார். கிளாசன் 14 பந்துகளில் 21 ஓட்டங்களைப் பெற முடிவில் 9 பந்துகள் மீதமிருக்க 8 விக்கெட்டுக்களால் வென்றது ஹைதராபாத்.

### மட்டமான ஆட்டம்

உதைப்பு, மேலெழும்பல், ஈரலிப்பு என எதுவும் இல்லாமல் வெறும் கட்டாந்தரையான ஆடுகளமாக நேற்றைய ஆடுகளம் காணப்பட்டது. 'பந்துவீச்சாளர்களுக்குத் துரோகம்' என்று கிரிக்கெட் வர்ணனையாளர்கள் அதை விமர்சித்தனர். மார்கோ ஜெமிசனின் 147 கிலோமீற்றர் வேகமுடைய பந்தை, அபிஷேக் சர்மா பின்னங் கால்களை நகர்த்தி சிக்சருக்கு அனுப்பினார். அவ்வளவுக்கு எந்தவொரு தாக்கமும் ஆடுகளத்தில் இல்லை. பந்துவீச்சாளர்களைக் கேலிக்கூத்தாக்கிய ஆடுகளம். மிகவும் மட்டமான ஆட்டம். (ம)







## எறும்பு கடித்துக் கிருமித்தொற்று; பெண் சிசுவொன்று பரிதாபச்சாவு

யாழ்ப்பாணம், ஏப். 13

எறும்பு கடித்ததால் ஏற்பட்ட கிருமித்தொற்றுக் காரணமாக பெண் சிசுவொன்று உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம் உடுவில் பகுதியைச் சேர்ந்த சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது. இரண்டு நாட்களுக்கு முன்னர் அந்தச் சிசுவை எறும்பு கடித்துள்ளது. எனினும், பெற்றோர் அதைப் பெரிதாக எடுக்கவில்லை. நேற்று பால் குடித்த பின்னர், அந்தச் சிசு கண் சொருகியுள்ளது.

இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிசு சேர்க்கப்பட்ட நிலையில், பரிதாபமாக உயிரிழந்துள்ளது. எறும்பு கடித்தமையால் ஏற்பட்ட கிருமித்தொற்றுக் காரணமாக இறப்புச் சம்பவித்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான துறைகளின் தெரிவுக்கு மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஏப். 13

**எங்களுடைய சமூகத்தில் வழிகாட்டிகளாக இருந்தவர்களின் பாதைகளை நாங்கள் பின்பற்றத் தவறுவதனால்தான் இன்றைய இளைய சமுதாயம் பிறழ்வான பாதையை நோக்கிச்செல்கின்றது.**

எங்கள் பிள்ளைகளுக்கு எவ்வாறான துறைகளைத் தெரிவுசெய்ய வேண்டும் என்ற போதுமான வழிகாட்டல்களை வழங்காதுவிடின் பாரதூரமான விளைவுகளை நாம் சந்திக்கவேண்டியிருக்கும். இவ்வாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் 150ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகளில் பங்கேற்று உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னைய காலங்களில் இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள் இங்கு வந்து கற்பித்ததாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். எதிர்காலத்திலும் அவ்வாறானதொரு நிலைமைதான் வரப்போகின்றதோ என்று பல அதிபர்கள் எனக்குச் சொல்கின்றார்கள். சில பாடங்களுக்கு எங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் போகப்போகின்றது. விஞ்ஞான, கணிதத் துறைகளைத் தெரிவுசெய்யும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்து செல்கின்றது. அவ்வாறு விஞ்ஞான மற்றும் கணிதத் துறைகளைத் தெரிவுசெய்தாலும் அவர்கள் மருத்துவர்கள் அல்லது பொறியியலாளர்கள் என்ற நிலையைத்தான் தெரிவு செய்கின்றார்களே ஒழிய அதற்கு அடுத்த நிலையிலுள்ள துறைகளைத் தெரிவுசெய்யவில்லை. இதனால் எமது மாகாணத்தில் இருக்கின்ற துணை மருத்துவ வெற்றிடங்கள் உள்ளிட்ட பலவற்றை நிரப்புவதற்கு வேறு மாகாணங்களிலிருந்து ஆட்களைப் பெற்றுக் கொள்ளவேண்டியிருக்கின்றது. இதற்கும் அப்பால் வெளிநாட்டு மோகம் எம்மவரிடையே இன்றும் இருக்கின்றது. இவை எல்லாம் இணைந்து எமது மாகாணப் பாடசாலைகளின் மாணவர் அனுமதியில் தாக்கத்தைச் செலுத்துகின்றன. மாணவர்களுக்கு இலக்கு இருக்க வேண்டும். கல்வியில் எதைச் சாதிக்கப்போகின்றோம் என்ற தூர நோக்கு இருக்கவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக மாணவர்களை கல்வியில் வளப்படுத்துவதுடன் மாத்திரமல்லாது தலைமைத்துவத்தையும் வளர்த்துவிடவேண்டும்- என்றார். (ச-20-113-28)





# யாழ்.தபால் அலுவலகத்தில் கற்பகம் விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ்ப்பாணம் பிரதான தபால் அலுவலகத்தில் உப முத்திரைப் பணியக கருமபீடமும் பனை அபிவிருத்தி சபையின் கற்பகம் விற்பனை நிலையமும் கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டன.

உப முத்திரைப் பணியக கருமபீடத்தை பிரதி அஞ்சல் மா அதிபதி ( செயற்பாடுகள்) எச்.எம்.பிறேமச்சந்திர ஹேரத்தும், கற்பகம் விற்பனை நிலையத்தை பனை அபிவிருத்திசபையின் தலைவர் த.சகாதேவனும் திறந்துவைத்தனர்.

குறித்த நிகழ்வில் வடக்கு பிரதி அஞ்சல் மா அதிபதி மதுமதி வசந்தகுமார், முத்திரைப் பணியகப் பணிப்பாளர் லங்கா டி சில்வா, பனை அபிவிருத்திசபை சந்தைப்படுத்தல் முகாமையாளர் பா.சுதாகரன், யாழ்ப்பாணம் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அனுராதா பர்ணாந்து, யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபர் பி.சாந்தகுமாரி, முத்திரை சேகரிப்பாளர்கள், பாடசாலை மாணவர்கள், முத்திரைப் பணியக உத்தியோகத்தர்கள், அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-33.125.17)

# இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஏப்.13

தவக்காலத்தை முன்னிட்டு தூய மரியன்னை ஆலய இளையோர் மன்றத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இரத்ததான முகாம் கோப்பாய், தூய மரியன்னை ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பி.ப 1 மணிவரை இடம் பெறவுள்ளது. (ச-41-100-இ-66)





# டிறிபேர்க் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்.சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த வியாழக்கிழமை கல்லூரியின் விசேட அரங்கில் ஆரம்பமானது. முதலாம் நாள் மாலை அமர்வில் 'டிறிபேர்க்' மலர் வெளியீடு நடைபெற்றது. கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் நூலின் முதற்பிரதியை வெளியிட்டுவைக்க கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், ஓய்வுநிலை வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகருமான என்.பி.ஸ்ரீந்திரன் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். (ச-66)



# அரச அதிகாரத்தை அரசு துஸ்பிரயோகம்

## முன்னாள் தவிசாளர் நிரோஷ் குற்றச்சாட்டு

தேர்தல் சட்டவிதிகளுக்கும் எமது மக்களின் சமய விழுமியங்களுக்கும் மதிப்பளிக்காது அரசாங்கம் என்ற அதிகாரப்போக்கில் தேசிய மக்கள் சக்தி செயற்படுகின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீர்வேலி வாய்க்கால் தரைப் பிள்ளையார் கோவில் முற்றத்தில் கோவிலின் முகப்பை மறைத்து மேடை அமைத்து தேசிய மக்கள் சக்தி பிரச்சாரக் கூட்டத்தை நடத்தியுள்ளது.

இது தேர்தல் சட்டவிதிமுறை மீறல் எனத் தேர்தல் முறைப்பாட்டு அலுவலர்கள் முன் சுட்டிக்காட்டினேன். தேர்தல் முறைப்பாட்டையடுத்து தேர்தல் அதிகாரிகள் கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு வழங்கிய அறிவுறுத்தல்களை அரசாங்கம் என்ற அதிகார மமதையிலேயே பிரதமர் தலைமையிலானவர்கள் மீறியுள்ளனர். இந்தச் சட்டமீறலுக்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு வழங்கியுள்ளனர். அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தியை நாட்டிலுள்ள தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் கட்டுப்படுத்தமுடியாதுள்ளன என்பதுவே நடைமுறை நிதர்சனமாகவுள்ளது. வரலாற்று நீதியில் [illegible] றப்பட்டுவிட்டோம் என்றார். (ச-26)

# எமது காணிகளை விடுவியுங்கள் கேப்பாபிலவு மக்கள் போராட்டம்

முல்லைத்தீவு, ஏப். 13

எமது காணிகளை உடன் விடுவிக்கவேண்டும் எனக் கோரி கேப்பாபிலவு மக்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர். கேப்பாபிலவு மக்களின் 55 குடும்பங்களின் 59.5 ஏக்கர் காணிகள் இன்னும் படையினரின் கட்டுப்பாட்டில் விடுவிக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றை உடன் விடுவிக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரனை சந்திந்து இதுதொடர்பான கோரிக்கை மனுவொன்றையும் வழங்கினர். அதற்குப் பதிலளித்த மாவட்டச் செயலர், கேப்பாபிலவு காணிகள் தொடர்பிலான விவரங்களைத் திரட்டுமாறு ஜனாதிபதி செயலகம் கடிதம் அனுப்பியுள்ளது. அதற்கான செயற்பாடுகளை நாங்கள் முன்னெடுத்துவருகின்றோம் - என்றார். (ச-25,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு செயலின் குணங்களைப் பொறுத்துத்தான் அவனுடைய எதிர் கால வெற்றி தோல்விகள் கணிக்கப்படும்.

–டார்வின்–

# ஓர் அபாய ஒலி!

இலங்கையின் பொருளாதாரமும், பொருளாதார மீளெழுச்சி நடவடிக்கைகளும் தளம்பலடையும் வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்று எச்சரித்திருக்கின்றது சர்வதேச நாணயநிதியம். உலகளாவிய ரீதியில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள், அமெரிக்காவின் வரிவிதிப்புகள், ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகைகள் (ஜி.எஸ்.பி.பிளஸ்) இரத்தாகக் கூடிய வாய்ப்புகள் என, இலங்கையைச் சூழவுள்ள நிலைமைகளை நுணுக்கமாக ஆராய்ந்தே இந்த எச்சரிக்கையை நாணயநிதியத்தின் பிரதானிகள் விடுத்துள்ளனர்.


உலகப் பொருளாதாரம் தொடர்பிலோ, அல்லது குறிப்பிட்ட ஒரு நாடு தொடர்பிலோ நாணய நிதியம் வெளியிடும் எச்சரிக்கைகள் மிகத் துல்லியமானவை. அவை அந்தந்த நாடுகளின் நிதிசார் நிலைமைகளை பட்டவர்த்தனமாகப் படம்பிடித்துக் காட்டக்கூடியன. ஆதலால், இலங்கை தொடர்பில் நாணயநிதியம் விடுத்துள்ள எச்சரிக்கைகள் மிகச் சாதாரணமானவையல்ல. இன்னும் சொல்லப்போனால், நாணய நிதியத்தின் கூற்றுகளில்தான், இலங்கையின் ஒட்டுமொத்த எதிர்காலமும் தங்கியுள்ளது எனக் கூறிக் கொண்டாலும் அதை மறுப்பதற்கில்லை.

இலங்கைஅண்மைக்காலமாகப்பொருளாதாரப் பின்னடைவில் இருந்து மீண்டுவந்தது என்பது உண்மைதான். ஆதலால், முதலீடுகளை மேற்கொள்ளக்கூடிய நம்பகரமான நாடாக இலங்கை மாறியிருந்தது. ஆனால், நாணயநிதியத்தின் சமீபத்திய எச்சரிக்கைகள், முதலீடுகளை இலங்கையில் இருந்து தொலைவாக வைக்கும் தன்மையின. இலங்கைப் பொருளாதாரத்தில் எந்த நிச்சயமற்ற நிலையும் இல்லாத நிலையில், இலங்கைக்குள் முதலீடுகளை மேற்கொள்வதற்கு எந்தவொரு நாடுகளும் - பெருநிறுவனங்களும் முன்வர மாட்டாது. இது தொடர்ந்தும் லோன்களிலும் கடன்களிலும்தான்இலங்கையைஇயங்கவைக்கும். அது, கடன் மீள்செலுத்துகையின்போது மிகப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

ஆக, இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் நாணயநிதியத்தால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கைகள் முழுக்க முழுக்க நிபுணத்துவ அறிவால்அணுகப்படவேண்டியவை. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி பொருளியல் நிபுணர்களை ஓரணியில் இணைத்தவாறு பயணிக்க வேண்டிய கட்டாயத்தனத்தில் இலங்கை தற்போதுள்ளது. ஹர் டி சில்வா, சம்பிக்க ரணவக்க போன்றோரின் நிபுணத்துவ ஆலோசனைகள் இன்று மிகவும் அவசியமானவை. கோத்தாபய ராஜபக்ச, ஆட்சியில் இருந்து விரட்டப்பட்டமைக்கு நிபுணத்துவ அறிவுரைகளையும், பரிந்துரைகளையும் புறமொதுக்கிச் செயற்பட்டமையே பிரதான காரணம். அவ்வாறான நிலை அநுரவுக்கும் நேரக்கூடாதெனில், நாடாளுமன்ற அறுதிப் பெரும்பான்மைக்கு அப்பாற்பட்ட கூட்டுமுயற்சிகளை அவர் முன்னெடுக்கவேண்டும்.

எல்லாவற்றையும்விட, ஒருநாடு கடன்களை மீளச்செலுத்தும் இயலுமையில் உள்ளதா? என்பதை ஆராய்ந்தே நாணயநிதியம் தன் கடன்களை விடுவிக்கும். அந்த அமைப்பு கட்டம் கட்டமாகக் கடன்களை விடுவிப்பதற்கான காரணமும் அதுதான்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# சஜித் பிரேமதாஸவுக்கு இந்தியப் பிரதமர் அழைப்பு



கொழும்பு, ஏப். 13

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை டெல்லிக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்தவார இறுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் நரேந்திரமோடி, கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து இருதரப்புக் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார். இதன்போதே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சந்திப்பில் பங்கேற்றிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் விஜயத்துக்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு பிரதமர் மோடி இதன்போது ஆலோசனை வழங்கினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## கைதிகளைப் பார்வையிட அனுமதி

கொழும்பு, ஏப். 13

சிறைக்கைதிகளைப் பார்வையிட உறவினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இன்றும் நாளையும் இந்த வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

கைதி ஒருவருக்குப் போதுமான தின்பண்டங்கள், உணவு, சுகாதாரப்பொருள்கள் அடங்கிய பொதியை மாத்திரமே உறவினர்கள் கொண்டுவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## 90 நாள்கள் தடுப்புக்காவலில் பிள்ளையான்

கொழும்பு, ஏப். 13

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தனை 90 நாள்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் காணாமற்போன சம்பவம் தொடர்பில் பிள்ளையான் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்புப் பிரதேசத்தில் வைத்து குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைதுசெய்யப்பட்ட பிள்ளையான் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் 72 மணிநேரம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில், பிள்ளையானை மேலும் 90 நாள்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது. (ச-இ)


## பங்குச்சந்தை வீழ்ச்சி

கொழும்புப் பங்குச்சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்றுமுன்தினம் வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

அதன்படி அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 54.63 புள்ளிகளால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன் கொழும்புப் பங்குச்சந்தையின் மொத்தப் புரள்வானது நேற்று 1.6 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது. (ச-இ)

## சட்டவிரோத கடற்றொழில் 43 பேர் கைது



கொழும்பு, ஏப். 13

2025 ஆம் ஆண்டில் மார்ச் 25 ஆம் திகதி முதல் ஏப்ரல் 7 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது, சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 43 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த நபர்கள் மண்டைதீவு, வாழைச்சேனை, சுண்டிக்குளம், நாவற்காடு, மட்டக்களப்பு உள்ளிட்ட பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 45 சட்டவிரோத வலைகள், 50 ஆயிரம் கடலட்டைகள், 13 டிங்கிகள், வெடிபொருள்கள் மற்றும் ஏராளமான சுழியோடி உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ச-இ)

நாளை
திங்கட்கிழமை- சித்திரை 1
14.04.2025
சுபநேரம் : 12.05- 01.35
ராகுகாலம் : 07.35 - 09.05
சித்திரைப் புத்தாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை சந்திக்கு அருகாமையில் யூனியன் கல்லூரிக்கு அருகில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம்.

தொடர்பு:- 076 947 9689

## வீடு வாடகைக்கு

யாழ் கல்லூரி வீதி நீராவியடியில் புதிய மூன்று அறை மாடி வீடு வாடகைக்கு உண்டு.

070 414 4877

## தேவை

ஆட்டோ மற்றும் ஆனு.90 மோட்டார் சைக்கிள் விலைக்கு தேவை.
பாரவூர்தி வாகன சாரதியும் தேவை.

☎ 078 731 1049

## விற்பனைக்கு

தனங்களப்பு - மன்னார் வீதியில் அமைந்துள்ள சகல வசதியும் கொண்ட வீடு மற்றும் காய்க்கும் தென்னைகள் நிறைந்த 60 பரப்பு தென்னந்தோட்டம் விற்பனைக்கு.
பகுதி பகுதியாகவும் விற்கப்படும்.
விலைபேசித் தீர்மானிக்கலாம்

(CR/0020) J-1

தொடர்பு:- 0094 77 425 3573

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் சந்தியில் 2வது காணி 50மில் 6.5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
ஒரு பரப்பின் விலை 90 லட்சம்.

077 826 0405, 077 844 7797

## மணமகள் தேவை

யாழ் இந்து (V) 32 வயதுடைய பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை.

(CS/57940) K-1

077 543 3062

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1999இல் பிறந்த B.COM பட்டதாரி, கொழும்பில் வசிக்கும் உதவி விரிவுரையாளர் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

078 668 7192

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் வீட்டுவேலை செய்வதற்கு அனுபவம் உள்ள பணிப்பெண் தேவை

தொடர்பு:- 077 616 0338

## மணமகள் தேவை

யாழ் இந்து (K) 50 வயதுடைய 12ல் செவ்வாய் புனர்பூச நட்சத்திரம் மிதுன ராசி விவாகரத்தான ஜேர்மனியில் வசிக்கும்மணமகனுக்கு 35 வயது தொடக்கம் 39 வயதிற்குட்பட்ட திருமணமாகாத மணமகள் தேவை. இலங்கை வந்து திருமணம் செய்து கொள்வார். சீதனம் எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை.

(CR/44763) J-1

தொடர்பு : சிறி 076 854 1976

மட்டுவில் வடக்கு கண்ணகை முன் பள்ளி சிறார்களின் மாதிரிச் சந்தை நேற்று சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. நிலையத் தலைவர் செ. கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் செ.சுப்பிரமணியம் கலந்து கொண்டார்.



(ச–9)

# மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 12 . 1937

மறைவு 10 . 04 . 2025

## அன்னரட்ணம் மயில்வாகனம்

கச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னரட்ணம் மயில்வாகனம் அவர்கள் கடந்த 10.04.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சிவகாமி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான S.A. வீரபாகு - விஷாலட்சுமி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற A.V மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் செல்வராஜா (லண்டன்), தவராஜா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பிரபாகரன் (ஜேர்மனி), கீத்தா (நோர்வே), சகிலா (நோர்வே), யதுஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லோகேஸ்வரி, சுரேஸ், ரமேஸ், விஜயகுமார், ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுகிர்தா, காலஞ்சென்ற அன்ரனிடா ஆகியோரின் மைத்துனியும், பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25, கச்சேரி வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
சகோதரன்- தவராஜா
077 839 2714
021 222 5775

(CS/57962) K-1

## வீடு விற்பனைக்கு

கொழும்பு மொரட்டுவ பகுதியில் இருக்கும் சொய்சாபுர தொடர் அடுக்கு மாடியில் C Block ல் இரண்டு அறையுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது. மாபிள் பதித்து முழு வீடும் திருத்தப்பட்டுள்ளது.
விலை - 15.000.000/-
தொடர்புகளுக்கு:-
+94 762 306 450
Email : mpact.uk@gmail.com

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 09 . 1957

மறைவு 06 . 04 . 2025

## சிவசுந்தரகாந்தன் சகிலா

ஏழாலை தெற்கு, ஏழாலை பிறப்பிடமாகவும், (frelenstein) சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுந்தரகாந்தன் சகிலா (லாலா) அவர்கள் கடந்த 06.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அண்ணார் காலஞ்சென்றவர்களான கணேசரத்தினம் (கார் கார கணேஷ்) - பவளமலர் தம்பதியரின் அன்பு மகளும், சுதாஜினி ,சுதாகர் (ராசன்), சயிக்குமார் (குட்டி), றதினி (பாப்பா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அண்ணாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.04.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் (இலங்கை நேரம்) Friedhofverwaltung Am Rosenberg 5, 8400 Winterthur இல் இடம்பெறும்.

Facebook live : https://www.facebook.com/share/15ziVwWRwk/?mibextid=wwXIfr மூலம் பார்வையிடலாம். இவ் அறிவித்ததலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ஜெயறூபி -+33 650 154 067
சுகிர் - +33 629 176 635
சுதாகர் - +94 772 032 665
சயிக்குமார் - +94 770 756 617

தகவல்:
குடும்பத்தினர்

(CS/57966) J-1

# மஹோற்சவம்

யாழ்., ஏப்.13

தெல்லிப்பழை வீணாக்கடவை காசிவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 10 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியளவில் சங்காபிஷேகம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து திருவேட்டை உற்சவம் இடம்பெறும். மாலை 7 மணியளவில் சப்பரத் திருவிழாவும், 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் தேர்த்திருவிழாவும், மறுநாள் 23 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தத்திருவிழாவும், அன்றையதினம் மாலை 6 மணியளவில் கொடியிறக்க இடம்பெறுமென ஆலய அறங்காவலர் தெரிவித்துள்ளார்.

(ச-41-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அலுவலகப் போக்குவரத்துச் சேவைக்கு அனுமதிப்பத்திரம் இனிக் கட்டாயம்

## மே மாதம் முதல் நடைமுறை

**கொழும்பு, ஏப். 13**

**எதிர்வரும் மேமாதம் முதலாம் திகதியிலிருந்து வடக்கில் அலுவலகப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் தற்காலிக அனுமதிப்பத்திரமின்றிச் சேவையில் ஈடுபடமுடியாது. அவ்வாறு சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் க.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

**இதுதொடர்பில் அவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.**

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அலுவலர்களுக்கான போக்குவரத்துச்சேவையை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் வடக்கு மாகாணத்தில் அலுவலர்களுக்கான போக்குவரத்துச் சேவையில் ஏற்கனவே ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அனைத்துப் பேருந்துகளும் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் அலுவலர்களுக்கான போக்குவரத்துச் சேவைக்கான தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளவேண்டியது கட்டாயமானதாகும். அலுவலர்களுக்கான போக்குவரத்துச் சேவைக்குரிய தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்வதற்கு எதிர்வரும் 30ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மே மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் அலுவலகப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் யாவும் பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு தற்காலிக அனுமதிப்பத்திரமின்றி சேவையாற்றுமிடத்து அவற்றுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்- என்றார். (ச-66.27)




# நம்பிக்கையை வென்றெடுப்போம்

## பருத்தித்துறை பரப்புரையில் பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

தெய்வேந்திரமுனை முதல் பருத்தித்துறைமுனை வரையான மக்களின் நம்பிக்கையை வென்ற ஒரே அரசாங்கம் தேசிய மக்கள் சக்தி அரசு. இன மத பேதமின்றி இலங்கை மக்களாக தேசிய மக்கள் சக்தி மீது அளவுக்கு அதிகமான நம்பிக்கையை வைத்துள்ளீர்கள். அந்த நம்பிக்கையை நாங்கள் காப்பாற்றுவோம்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் வெற்றி நமதே ஊர் எமதே எனும் தொனிப்பொருளில் வடமராட்சி சபைகளுக்கான மக்கள் சந்திப்பு பரப்புரைப் பொதுக் கூட்டம் பருத்தித்துறை கொட்டிக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது பிரதமர், கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரே கட்சியைச் சேர்ந்த 159 உறுப்பினர்கள், சகல இனங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்கள், சகல பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள், அதிக பெண் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நாடாளுமன்றம் தற்போது அமைந்துள்ளது. இது இலங்கை வரலாற்றில் முதல் சந்தர்ப்பமாகும்.

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் நாடு பல வழிகளில் பிளவுபடுத்தப்பட்டது. இதன் காரணமாக எமக்குள் நாங்கள் எதிர்த்துப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டு எதிரிகளாக்கப்பட்டோம். இதனை இனியும் அனுமதிக்கமுடியாது. அந்த நிலையை மாற்றியாகவேண்டும் - என்றார். (ச-100)

# புலிபாய்ந்தகல் பகுதியில் மீன்பிடியில் அடாவடி

## பிரதேச செயலர் நடவடிக்கை

முல்லைத்தீவு, ஏப். 13

முல்லைத்தீவு புலிபாய்ந்தகலில் பெரும்பான்மை இனத்தவர் அத்துமீறி வாடி அமைத்த விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் வலியுறுத்தலையடுத்து வாடியை அகற்றுமாறு பிரதேசசெயலர் அறிவிப்பு விடுத்ததுடன் சந்தேகநபருக்கும் எதிராக சட்டநடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, புலிபாய்ந்தகல் பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக மீனவ வாடிகளை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் அனுமதி எதனையும் பெறாது அத்துமீறி பெரும்பான்மை இனத்தவர்களால் அமைக்கப்பட்ட வாடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அண்மையில் வலியுறுத்தினார்.

அதற்கமைய கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் திருமதி.மஞ்சுளாதேவி சதீசன் குறித்த பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வாடிகளை அகற்றுமாறு அறிவித்தலைக் காட்சிப்படுத்தியுள்ளார். அத்தோடு அப்பகுதியில் அத்துமீறி வாடி அமைத்த சந்தேகநபராக இனங்காணப்பட்ட பெரும்பான்மை இனத்தவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கரைதுறைப்பற்றுப் பிரதேசசெயலாளர் தெரிவித்துள்ளார். (ச-246)

# பொதுமக்களின் இடுகாடு முறையாக விசாரிக்கப்படும்

## வடமாகாண பிரதம செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.13

சுழிபுரம் கிழக்குவாழ் பொதுமக்களின் இடுகாடு தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என வடமாகாண பிரதம செயலாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுழிபுரம் கிழக்கு பாண்ட் வெட்டைக் காட்டுப்புலம் வாழ் கிறிஸ்தவர்களின் உடலம் அடக்கம்செய்யப்பட்ட 150க்கும் மேற்பட்ட உடலங்களைக் கொண்ட காணி தனிநபரால் அபகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதி மக்களுக்கு மூளாய் பகுதியில் மாற்றுக் காணி வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆனால் குறித்த மக்கள் வாழும் குடியிருப்புகளுக்கும் மூளாய்க்கும் நீண்டதூர இடைவெளி காணப்படுகின்றது. எனவே இந்த விவகாரம் தொடர்பில் முறையான விசாரணைகளை பிரதேசசபையுடன் இணைந்து முன்னெடுக்கப்படும்- என்றார். (ச-33-125)



# ஓமந்தை விளையாட்டு அரங்கு விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை

## விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, ஏப். 13

வவுனியா, ஓமந்தை விளையாட்டு அரங்கை மேலும் விரிவுபடுத்தி சர்வதேச தரத்துக்குக் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார்.

வவுனியா, ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு அரங்குக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அதன் தேவைப்பாடுகள் தொடர்பாகக் குறித்து கேட்டறிந்துகொண்டார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னி மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கு ஓமந்தையில் அமைந்துள்ளது. அங்கு பல தேவைகள் காணப்படுகின்றன. பயிற்சிகளை வழங்குவதற்கான பயிற்றுவிப்பாளர்கள், அதற்கான உபகரணங்கள் எனப் பல தேவைப்பாடுகள் இருக்கின்றன. அவற்றை எதிர்வரும் காலங்களில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இளைஞர்களிடையே காணப்படுகின்ற தீய பழக்கவழக்கங்கள், மது பாவனை, தொலைபேசிப் பாவனை, போதைப்பொருள் பாவனை என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு விளையாட்டுதுறை அவசியம். அந்தவகையில் இந்த விளையாட்டு அரங்கை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ச-110)

# மணவாளக்கோல விழா

யாழ்ப்பாணம், ஏப்.13

உரும்பிராய் மடத்தடி அருள்மிகு ஞானவைரவர் ஆலய மணவாளக்கோல விழா இன்று 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு 108 சங்காபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து விஷேட பூஜைகள் இடம்பெற்று வைரவப்பெருமான் திருவீதியுலா வருவார். தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படுமென ஆலயப்பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ச-25)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மன்னார் மாவட்ட பனம் பொருள் உற்பத்தியாளர்களின் எதிர்கால சந்தைப்படுத்தல் நடவடிக்கை களை முன்னிறுத்திய திட்டமிடலுக் கான ஒன்றுகூடல், பனை அபிவி ருத்திச்சபையின் மாவட்டத் தலை வர் யு.பெனில்டஸ் பீரிஸ் தலை மையில், மன்னார் தனியார் விடுதி ஒன்றில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.
இதன்போது பனங்களி, கிழங்கு, வெல்லம், பதநீர், ஒடியல், பனாட்டு, பனங்கட்டி இவற்றோடு பனையோலைக் கைவினைப் பொருள்கள் தயாரித்தல் போன்ற பல்வேறு வளர்ச்சித்திட்டங்களுக் கான கருத்துகள் முன்வைக்கப்பட் டன. (ச-25,60)



# தெய்வீக இசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.13
சந்நிதியான் ஆச்சிரம சைவக லைப் பண்பாட்டுப் பேரவை யின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள் ளிக்கிழமை தொண்டைமா னாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது. ஆச்சிரம முதல்வர் செ.மோக னதாஸ் சுவாமிகள் தலைமை யில் நடைபெற்ற நிகழ்வில் திருவாடுதுறை ஆதின திருமு றைச்செல்வர் ந.பரமேஸ்வ ரன் பக்கவாத்திய சகிதம் தெய்வீக இசைநிகழ்வு நிகழ்த்தினார். (ச-41-66)



# வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஏப்.13
உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வேட்பா ளர்கள் பின்பற்றவேண்டிய சட்டங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பாக, கிளி நொச்சி பூநகரிப் பிரதேசசபையில் போட் டியிடும் வேட்பாளர்களுக்கான கலந்துரை யாடல் பூநகரிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் வேலாயுதம் சிவராசா தலைமையில் நடைபெற்ற கலந் துரையாடலில் தேர்தலுடன் தொடர்பு டைய விடயங்கள் தெளிவுபடுத்தப்பட் டன. (ச-25,113)





# சிறுவர் மகிழ்வகம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.13
'பாயர் மேட்' நிறுவனத்தின் அனுசரணையில் யாழ். வடமராட்சி கிழக்கு நித்தியவெட்டை முள்ளியானில் சிறுவர்களுக்காக அமைக்கப்பட்ட மகிழ் வகம் யாழ். மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபனால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.
நிகழ்வின் ஒரு பகுதியாக மகிழ்வகம் வளாகத்தைச் சுற்றி மரக்கன்றுகள் நடப்பட்டன. (ச-41-27)



# நெருப்புக்காய்ச்சலுக்கு தடுப்பூசி ஏற்றும் பணி

பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில், உண வுற்பத்திசாலைகள் உணவகங்கள் மற்றும் பாடசா லைச் சமையலாளர்கள் மூலம் நுகர்வோருக்கு நெருப்புக்காய்ச்சல் ஏற்படுவதைத் தடுக்கும் முகமாக தடுப்பூசி ஏற்றும் பணிகள் சுகாதார மருத்துவ அதி காரிப் பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நெருப்புக்காய்ச்சல் பாதிப்படைந்தோரின் மலசலத் தாலும், மாசாக்கப்படும் உணவு, நீர் மூலமும், நோய்க்காவிகளாக பரவக்கூடியது.
நெருப்புக்காய்ச்சலினால் பாதிப்படைவோர் கடும் சுகாதாரப் பாதிப்பை எதிர்கொள்வதுடன் உயிரிழப்பு களையும் சந்திக்க நேரிடுகிறது.
அதனையொட்டி பூநகரி, ஜெயபுரம், முழங்காவில் ஆகிய பகுதிகளில் இந்தத் தடுப்புமருந்து ஏற்றப்பட் டுவருகிறது. இந்தத் தடுப்பு மருந்தை ஏற்றுவோருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு நெருப்புக்காய்ச்சல் ஏற்ப டாது என்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகின்றது. (ச-41-9)





# இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.13
துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மூன்று முறிப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை யின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திற னாய்வு விளையாட்டு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பாடசலை அதிபர் சி.பத்மதா சன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் பிரதம அதிதியாக ஆரம்பக்கல்வி துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப் பாளர் செ[illegible] கலந்துகொண்டார். (ச-41-35)

தரம் 3இற்கான வலய மட்ட கணித செயற்பாட்டு முகாம் இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில், முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆங்கிலப் பாடப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப. சுதர்சன் கலந்துகொண்டார். (ச-41-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதியவகை கெக்கரிக்காய் தருமபுரத்தில் அறுவடை

கிளிநொச்சி, ஏப். 12

கிளிநொச்சி மாவட்ட விவசாயத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் புளியம்பொக்கனை கமநல சேவை பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவரால் முதன்முறையாக நடுகை செய்யப்பட்ட கெக்கரிக்காய் கண்ணுருவையிட் எனும் புதிய வகை இனத்தின் அறுவடை விழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் வி.சோதிலட்சுமி, பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாயபோதனாசிரியர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது விவசாயிகள் தெரிவிக்கையில்,

தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வகை கெக்கரி இனத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் விற்பனை செய்வதில் பெரும் சிரமங்கள் உள்ளன. வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுமாயின் சிறந்த இலாபத்தைப் பெறமுடியும் என்றனர். அதற்கு பதிலளித்த கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர்,மிகப்பெரிய அளவில் இவை உற்பத்தி செய்யப்படுமாயின் ஏற்றுமதி செய்வதற்கான சந்தை வாய்ப்பினைப் பெற்றுத்தரமுடியும் - என்றார். (ச- 25, 113)

## யாழ் வேலைவாய்ப்புக்கள்

- Office & System Admin : 0776790646
- Cashier , Sales girls : 0740823494
- Sales Manager(Basic 90,000/=) : 0779969661
- Technician (Private Company) : 0761000231
- Show room Manager : 0763594362
- Technical Officer(Construction) : 0778800143
- Cashier , Stock Keeper : 0776776115
- Maintenance Staff (Hotel) : 0772980542
- Supervisor, Salesman : 0779999919
- House Keeping : 0775367526

மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு : dewmasweb.com
வேலையாட்கள் தேவையா : 0741383368 ,0217284770
DEWMAS Dewmas : 51 , Amman Road,Nallur




(ஜ-14-த)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் புத்தளம் மக்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தளம் சேனைக்குடியிருப்பு, மணற்குன்று, அபயபுர, அரலியபுயனப் பிரதேசங்களில் வாழும் பல்லின சமூகங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 55 குடும்பங்களுக்கு ரூபா 2 இலட்சம் பெறுமதியான அத்தியவசியமான உணவுப்பொருள்கள் சித்திரைப் பொங்கலை முன்னிட்டு வழங்கப்பட்டன.

குறித்த உதவிவழங்கும் நிகழ்வு சமூகசேவையாளரும், புத்தளம் கருமாரிஅம்மன் ஆலய ஸ்தாபகருமான எஸ். மகேந்திரன் தலைமையில் ஆலயத்தில் இடம்பெற்றது. இதில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத்தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று உதவிகளை வழங்கிவைத்தார். (ச-41)



## நற்சிந்தனைப் போட்டி

# கனகாம்பிகைக்குளம் பாடசாலை மாகாணமட்டத்தில் இரண்டாமிடம்

கிளிநொச்சி, ஏப். 13

சிவயோகசுவாமிகளின் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நற்சிந்தனைப் பாராயணப் போட்டிகளில் கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை மாணவர்கள் வலயமட்டத்தில் முதலாம் இடத்தையும் மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர். போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-17)

# வர்த்தக நிலையங்கள் யாழில் திடீர்ச் சோதனை

யாழ்ப்பாணம், ஏப்.13

பண்டிகைக்காலத்தை முன்னிட்டு யாழ்.மாநகரப் பிரதேத்திலுள்ள வர்த்தக நிலையங்களைச் சோதனைசெய்யும் நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர், யாழ்.நகரப் பகுதி , அரியாலை, கொழும்புத்துறை, குருநகர், நாவாந்துறை, வண்ணார்பண்ணை, நல்லூர் ஆகிய பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் இந்தத் திடீர்ச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்தச் சோதனை நடவடிக்கையின்போது மனிதபாவனைக்கு உதவாத பொருள்கள், காலாவதியான பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 . 03 . 1951



மறைவு
13 . 04 . 2024

## அமரர் தம்பையா மகாலிங்கம்

திதி: வளர்பிறை பஞ்சமி

ஆண்டொன்று ஆனதோ அதிவிரைவாய்
உங்கள் மறைவை இன்னும்
எனது மனம் ஏற்கவில்லை மாலிஷ்.

கனவுகள் கலைந்து போனது
நம் கற்பனைகள் எல்லாம் சிதைந்து போனது
வாழ்வின் அர்த்தம் புரிந்தது.

எல்லோருக்கும் ஒரு வழிகாட்டியாய் இருந்தீர்கள்
இன்று ஆறுதல் இன்றி தனிமையில் நான்
உங்கள் நினைவுகளால் தவிக்கிறேன்.

உந்தன் மூச்சில் இணையும் பொழுது
என்னை மறந்தேன்
உன் அன்பின் இறகில் நான்
விடியலை காண்கிறேன்.

அழியாத காவியமாய் நீங்கள்
என்றென்றும் என் மனதில்
இடம் பிடித்துள்ளீர்கள் மாலிஷ்.

எனது விழிகளின் ஓரம் என்றும்
கண்ணீர் துளிகள்
காரணம் நான் அறியேன்
உங்கள் வார்த்தைகள் என்றும்
எனது செவிகளில் விழுகிறது.

உங்கள் ஆத்மா இறைவன் திருப்பாதத்தில் இளைப்பாறட்டும்.

என்றும்
மனைவி-நிர்மலா

மாப்பாணவூரி, காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறங்காவலர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.13

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் தர்மகர்த்தா சின்னத்தம்பி அறக்கட்டளையின் ஏற்பாட்டிலான அறங்காவலர் தின நிகழ்வு அண்மையில் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டச் செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் பங்கேற்றார். நிகழ்வில் சாதனை மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். அத்துடன் கோவில் வெளியீடான சுதர்சனம் நூலும் வெளியிட்டுவைக்கப் பட்டது. (ச-9)

## ஆபிரிக்காவில் வலுவாகின்றது ஐ.எஸ்.!

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு ஆபிரிக்காவைத் தளமாகக் கொண்டு தற்போது செயற்பட்டு வருகின்றது என்று ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

ஈராக் மற்றும் சிரிய நாடுகளைத் தளமாகக் கொண்டு ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்புச் செயற்பட்டிருந்தது. அல் பக்தாதியின் மறையின் பின்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். பலமிழந்தது. ஈராக்கிலிருந்து ஐ.எஸ். முற்றாக விரட்டியடிக்கப்பட்ட நிலையில், சிரியாவின் எல்லைப் பகுதிகளில் அந்த அமைப்பு செயற்பட்டு வந்தது. இந்த நிலையில், ஆபிரிக்க நாடுகளைத் தளமாகக் கொண்டு ஐ.எஸ்.ஐ.எஸ். தன்னை மறுகட்டமைப்புச் செய்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக மோதல்கள் காரணமாக பதற்றத்தில் இருந்துவரும் மேற்கு ஆபிரிக்க நாடுகளை ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு தனக்கு ஏற்ற இடமாக மாற்றி வருகின்றது. பட்டினி மற்றும் உள்நாட்டுப் போர்களைப் பயன்படுத்தி ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தீவிரவாதிகள் அந்த நாடுகளில் தமது தளங்களை அமைத்து வருகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)


## அறை வாடகைக்கு தேவை

பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தங்கியிருந்து படிப்பதற்கு குளியலறையுடன் கூடிய அறையொன்று தேவை. நல்ல தண்ணீர் வசதியுடன் அமைவது அவசியம்.

தொடர்பு: 077 299 0490


## 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
30 . 11 . 1972



மறைவு
14 . 03 . 2025

**அமரர் பிரியதர்சினி கனகரத்தினம்**
(ஆசிரியர், யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை)

காலனவன் கைப்பிடியில்
கணப்பொழுதில் சிக்கிவிட்டாய்
காலமெல்லாம் உன் நினைவுகளுடன்
கலங்கி எமைத் தவிக்க விட்டு-நீ
அமைதியாக உறங்கு பிரியா
அன்னை தான்தோன்றியம்மன் தாளினிலே
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்துறை.

குடும்பத்தினர்.

(CS 1318) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 09 . 1948



மறைவு
11 . 04 . 2025

**அமரர் செல்லத்துரை தவராசா**

உரும்பிராய் மேற்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தவராசா அவர்கள் நேற்று முன்தினம் (11.04.2025) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-பகவதியம்மா தம்பதியின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான கனகர்-அன்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகனும் மனோன்மணிதேவி அவர்களின் பாசமிகு கணவரும் சிவறாஜினியின் (பொது சுகாதார முகாமைத்துவ உதவியாளர் யாழ் போதனா வைத்தியசாலை) பாசமிகு தந்தையும் பற்குலேந்திரனின் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்) அன்பு மாமனாரும் லினுஷனின் அன்புப் பேரனும் சிவயோகமலர், நவரத்தினராசா, இராஜேஸ்வரி, சத்தியசீலன், யோகராசா, செல்வநாயகி, செல்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சின்னராசா மற்றும் தியாகராசா, நடராசா, காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் துரைராசா, சாரதாமணிதேவி, செல்வராசா, கனகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

"மோட்டார் கராஜ்"
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 316 4431

## மரண அறிவித்தல்

பிறப்பு
06 . 11 . 1939



இறப்பு
11 . 04 . 2025

**சரவணபவன் மகேஸ்வரி**

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணபவன் மகேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (11.04.2025) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-பாக்கியம் தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-மங்கயற்கரசி தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சரவணபவனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நவமணி (மலேசியா), மனோன்மணி (அவுஸ்ரேலியா), காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராஜபரமசிவம், கார்த்திகேசன் ஆகியோரின் மைத்துனியும் விஜயமாலினி, வசந்தி (லண்டன்), காலஞ்சென்ற ஜெயந்தி ஆகியோரின் தாயாரும் ஆனந்தநடேசன், காலஞ்சென்றவர்களான ஸ்ரீசெல்வானந்தராஜா, ஞானச்சந்திரன் ஆகியோரின் மாமியாரும் லக்சன், சிந்துஜன், அஞ்சலா, ஹேமளா, சர்மிளா, அஷ்லி, ஹரி (லண்டன்), காலஞ்சென்ற சௌமியா, சரண்ஜா, சாகினியா, பவித்திரா, கஜானன் ஆகியோரின் பேர்த்தியும் பிரணவனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மதியம் 01.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
076 907 1027
077 619 4136

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகப்போரில் மோதும் அமெரிக்கா - சீனா

**கொழும்பு, ஏப். 13**

**அமெரிக்கா - சீனா இடையேயான வர்த்தகப்போர் தீவிரம டைந்துவரு கிறது. அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக் கும் வகையில் சீனாவும் அமெரிக்கா மீதான வரிகளை உயர்த் தியுள்ளது. இரு நாடுகளும் மாறி மாறி வரிவிதித்து வருவது சர்வதேச வணிக பதற்றத்தை அதிகரித்துள்ளது.**

பரஸ்பர வரிப்பட்டியலை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த 2 ஆம் திகதி வெளியிட்டார். இதில் சீனப் பொருள்களுக்கான வரி 34வீதமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலடியாக அமெரிக்காவின் அனைத்துப் பொருள்களுக்கும் 34 வீத வரிவிதிக்கப்படும் என சீனா அறிவித்தது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா சீனாவின் கூடுதல் வரிவிதிப்புக்கு அபராதமாக 50 வீத வரியை விதித்ததனால் சீனப் பொருள்களின் மீதான வரி 104 வீதமாகியது.

இந்தநிலையில் அமெரிக்கப் பொருள்களுக்கான வரி 84 வீதமாக உயர்த்தப்படும் என சீன நிதியமைச்சு அறிவித்தது.

இந்தச் சூழலில் உலக நாடுகளின் பொருள்கள் மீதான பரஸ்பர வரி விதிப்பை 90 நாள்களுக்கு நிறுத்திவைத்தார் ட்ரம்ப். எனினும் இது சீனாவுக்குப் பொருந்தாது என்றும் தெரிவித்து சீனாவுக்கான பரஸ்பர வரியை மட்டும் ட்ரம்ப் 125 சதவீதமாக மேலும் அதிகரித்தார்.

இந்த நிலையில் தற்போது மீண்டும் சீனப் பொருள்கள் மீதான வரியை 145 வீதமாக அதிகரிப்பதாக அமெரிக்காவின் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.


இந்த நிலையில் அமெரிக்கா விதித்த மிகப்பெரிய வரிகளுக்கு எதிராக சீனா மீண்டும் பதிலளித்துள்ளது.

சீன இறக்குமதிகள் மீதான வரிகளை 145 வீதமாக அதிகரிப்பதாக வெள்ளை மாளிகை அறிவித்ததன்படி அமெரிக்கப் பொருள்களுக்கான வரியை சீனா 84 வீதத்திலிருந்து 125 வீதமாக உயர்த்தி அறிவித்துள்ளது.

ஏற்கனவே அமெரிக்கா - சீனா இடையே வரி அறிவிப்பால் அமெரிக்க பங்குச்சந்தை சரிந்துவருகிறது. அத்துடன் தங்கமும் வரலாறு காணாத அளவுக்கு உச்சம் தொட்டுகிறது. இரண்டு பெரிய உலகப் பொருளாதாரங்களுக்கு இடையேயான வர்த்தக மோதலை தீவிரப்படுத்தியுள்ளது. (ச-இ)



யாழ்ப்பாணம், வரணி தான்தோன்றிக் கண்ணகை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் கடந்த வியாழக்கிழமை காலை 09.10 மணி முதல் 10.10 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் சிறப்புற நடைபெற்றது. (ச-20)



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் வருடாந்த நடைபாதை வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நூற்றுக் கண்கான மக்கள் ஆர்வத்துடன் கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-17)


# மரண அறிவித்தல்

## திரு சந்தியோ அந்தோனிப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் (வவா)

(முன்னாள் உதவி முகாமையாளர், சுதந்திர வர்த்தக வலயம்-கொழும்பு, றாஜ் லொட்ஜ், றாஜ் தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர்)



பிறப்பு 23.06.1942

இறப்பு 12.04.2025

யாழ்ப்பாணம் இல 42/5, மவுண்கார்மல் வீதி, குருநகரைப் பிறப்பிடமாகவும் இல 31, கதீற்றல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு சந்தியோ அந்தோனிப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் (வவா) அவர்கள் நேற்று (12.04.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியோ அந்தோனிப்பிள்ளை-அன்னம்மா தம்பதியின் அன்பு மகனும் இயக்கோ மடுத்தீன்-அக்கினேசம்மா தம்பதியின் மருமகனும் தேவாராஜேஸ்வரி (ஒலிவம்) அவர்களின் அன்புக் கணவரும் அன்ரனீரா (கிரிஜா-ஓய்வு நிலை ஆசிரியர்), அஞ்சலோ (றாயு-உதவிப் பொது முகாமையாளர், DEARO Investment Ltd), ஆன்ஸ்ரறீனா (வனஜா-ஆசிரியர், யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யஸ்ரின் அன்ரனிற்றோ (ஓய்வு நிலை பிரதி அதிபர்), ஜெராட் (றொசானி-ஆசிரியர், யா/புனித மரியாள் வித்தியாலயம் OLR), DR. ஜெறோம் லோகதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ்கா யோசப், ஸ்ரீபன், எட்வேட், அருட்சகோதரி மேரிலு/யிஸ் (திருக்குடும்ப கன்னியர் சபை) மற்றும் ஜெறோம் (பிரான்ஸ்), ஜேம்ஸ் (கனடா), இருதயநாயகி பிற்றர் (ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர், கமநல அபிவிருத்தித் திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஜோன் பப்ரிஸ், கிறிஸ்ரீனம்மா அருட்சகோதரி, யூட் மடுத்தீன் (திருக்குடும்ப கன்னியர் சபை) மற்றும் இலாசறஸ் (ஓய்வு நிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அனோஜியஸ், அனோஜா, அனுராஜ், ஆன்கிறிஸ்ரர், ஆன் விக்ரோறினா ஆகியோரின் அன்புப் பேரனும் அருட்தந்தை விக்கர் பிலேந்திரன் (வாழ்நாள் பேராசிரியர், யாழ் படைகலைக்கழகம்), அருட்தந்தை வென்சஸ்சலோஸ் (முஆஜ, அஞ்சலியகம், பருத்தித்துறை) ஆகியோரின் சிறிய தந்தையும் அருட்தந்தை அன்ரனிதாஸ் (பங்குத்தந்தை, புனித பீற்றர் தேவாலயம், நவாலி), அருட்சகோதரி. பிறிசில்டா (திருச்சிலுவைக் கன்னியர் சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருட்தந்தை ஜோன் கனிசியஸ் (பங்குத்தந்தை புனித பற்றிமா தேவாலயம், உருத்திரபுரம்') ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கதீற்றல் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து (15.04.2025) செவ்வாய்க்கிழமை பி.ப 03.00 மணிக்கு திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்டக்கம் செய்யப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல 31, கதீற்றல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 069 0408
077 394 7972

(CS 1895) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திஸ்ஸ...

போராட்டத்தில் கலந்துகொண்ட பொது மக்கள் தெரிவித்ததாவது:-

தையிட்டியில் எங்களின் காணிகளை அபகரித்து இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நாங்கள் ஜனாதிபதி உட்பட அனைத்து உயர் அதிகாரிகளிடமும் முறையிட்டுள்ளோம். எனினும், இதுவரை எமக்கான தீர்வொன்று வழங்கப்படவில்லை. மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்ற விடயத்தை அமைச்சர்கள் சிலர் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும், காணிகள் எம்மிடம் மீளவும் ஒப்படைக்கப்படாமை ஏமாற்றகரமானது. தற்போது துறைசார் அமைச்சால் காணிகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றை நாங்கள் ஒப்படைத்துள்ளோம். அமைக்கப்பட்டிருப்பது விகாரையாகவே இருந்தாலும், இதுவொரு சட்டவிரோதக் கட்டடம்தான். எனவே, அதை அகற்றிவிட்டு அந்தக் காணிகளை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். உரிய தீர்வு கிட்டும்வரை நாங்கள் போராடுவோம் என்றனர்.

இந்தப் போராட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் என்.சிறீகாந்தா, வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தி.நிரோஷ், ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் நாவலன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.



நேற்றைய போராட்டத்தில் மனித உரிமைச் செயற்பாட்டாளரும், அரசியற் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தலைமையிலான மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர். திஸ்ஸ விகாரையின் தற்போதைய விகாராதிபதியைக் குறித்த குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடக் கடும் பிரயத்தனம் மேற்கொண்ட போதிலும் விகாராதிபதி அவர்களைச் சந்திப்பதற்கு மறுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-125)

## வலிகாமத்தின்..

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மக்கள் நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு மிகச்சிறந்த வெற்றியை வழங்கினார்கள். நாங்கள் அரசாங்கத்தைப் பொறுப்பெடுத்து ஆறு மாதங்களாகின்றன. குறுகிய காலத்துக்குள் நாங்கள் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். கடன் செலுத்தமுடியாமல் இருந்த நாட்டை தற்போது, பொருளாதாரத்தில் மேம்பட்ட நிலையை நோக்கிக் கொண்டு செல்கின்றோம். நாட்டின் நிதிநிலைமை கவலைக்குரியதாக இருந்தாலும், அரச ஊழியர்களுக்கு ஊதியத்தை அதிகரித்துள்ளோம். அத்துடன், பொருள் களுக்கான விலைகளையும் குறைத்துள்ளோம். மீனவர்களுக்கு எரிபொருள்களுக்கான சலுகைகளை நாங்கள் வழங்கிவருகின்றோம்.

அத்துடன், வலிகாமம் பகுதியிலும் நாங்கள் பரந்துபட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துவருகின்றோம். இந்த அபிவிருத்திகள் தொடரவேண்டும். ஊழலற்ற ஆட்சி நிலைபெறவேண்டும். அதற்காக நீங்கள் உள்ளாட்சித் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தியை வெற்றிபெறச் செய்ய வேண்டும் - என்றார். (அ-ம-125)

## வடக்கு...

வணிகர்கழகம் அழைப்புவிடுத்துள்ளது. யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில், யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்திலுள்ள காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை வளாகம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை வளாகம், மாங்குளம் நகர அபிவிருத்தி வளாகம் ஆகிய 3 இடங்களில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் அமையவுள்ளன. விவசாயம்சார் பெறுமதிசேர் தொழிற்சாலைகள், மீன்பிடிசார் பெறுமதிசேர் தொழிற்சாலைகள், ஆடைத்தொழிற்சாலைகளை அங்கு அமைக்க முடியும். அத்துடன் மின்சார உபகரணங்கள், தொழிற்சாலை இயந்திரங்கள், கடதாசிசார் உற்பத்திப்பொருள்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆடைத்தொழிற்சாலைகள், இரசாயனம்சார் உற்பத்திப் பொருள்கள் உள்ளிட்ட இலங்கையில் தடை செய்யப்படாத பொருள்களைத் தயாரிக்கமுடியும்.

இந்த முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் நீர்வழங்கல், கழிவுநீர் முகாமைத்துவம், உள்ளக வீதி வசதிகள், மின்சார வசதிகள் என்பன கிடைக்க வசதி செய்யப்படும். இதற்கு மேலதிகமாக முதலீட்டு ஊக்குவிப்பாக முதலீட்டுக் கழிவுரிமை 200 வீதம் வழங்கப்படும். இது ஏனைய பகுதிகளில் 100 வீதமாக உள்ளது. முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் 30 வருட குத்தகைக்கு வழங்கப்படும். இது பொதுவான நடைமுறை. தேவையை பொறுத்து இதனை நீடித்துக் கொள்ளலாம். தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனுமதிகளை முதலீட்டுச் சபை ஒழுங்கமைத்து வழங்கும். அத்துடன், தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்கள், உபகரணங்கள், தளபாடங்கள், கட்டட நிர்மாணத்துக்குத் தேவையான பொருள்கள் போன்றவற்றுக்கு இறக்குமதித் தீர்வை விலக்களிக்கப்படும். ஏற்றுமதி நோக்கிலான தொழில் முயற்சிகளுக்கு தேவையான மூலப்பொருள்களைத் தீர்வை இன்றி இறக்குமதி செய்யலாம். எனவே மிககுறுகிய காலகட்டத்தில் வடமாகாணத்தில் அமையவுள்ள 3 முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் வடமாகாணத்தைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் வடமாகாணத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்த முதலீட்டாளர்களை முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கிறோம்.

இதன்மூலம் வடமாகாணம் பொருளாதார ரீதியாக முன்னேறவும், தேசிய ரீதியாக எமது உற்பத்தியின் பங்களிப்பை அதிகரித்துக்கொள்ளவும் முடிவதுடன் வடமாகாணத்தில் அதிகளவானோருக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்கும் ஏதுவாக அமையும்.

மேற்படி பிரதேசங்களில் சர்வதேச தரத்தில் அமையவுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் தமது விண்ணப்பங்களை இலங்கை முதலீட்டு சபைக்கு சமர்ப்பிக்க முடியும். இது தொடர்பில் மேலதிக விபரங்களைப் பெறுவதற்கு யாழ் வணிகர் கழகத்தைத் தொடர்புகொள்ளலாம் - என்றார். (அ-ம-26)

## கழுத்தைப்...

வருவதாவது:-

வாகன சாரதியொருவர் குருமன்காடு சந்திப்பகுதியில் வர்த்தக நிலையமொன்றுக்கு முன்பாக வாகனத்தை நிறுத்தியுள்ளார். இதன்போது அங்கு வருகை தந்த பொலிஸார், வாகனத்தை அங்கிருந்து அகற்றுமாறு அவருக்கு அறிவுறுத்தியுள்ளனர். எனினும், அந்த நபர், உடனடியாக வாகனத்தை அகற்றாது, வர்த்தக நிலையத்துக்குத் தேவையான பொருள்களை இறக்குவதால் சிறிது அவகாசம் தருமாறு கோரியுள்ளார்.

இதன்போது பொலிஸார் வாகனத்தின் திறப்பை எடுத்துச் சென்றதுடன் சிங்கள மொழியில் எழுதப்பட்ட குற்றப் பத்திரத்தைக் கொடுத்துள்ளனர். அந்த நபர், 'எனக்குச் சிங்களம் தெரியாது. எனவே, தமிழில் குற்றப்பத்திரத்தைத் தாருங்கள்' என்று கோரியுள்ளார். இதையடுத்து, வாகனச் சாரதிக்கும், பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன்போது, அவ்விடத்துக்கு வந்த போக்குவரத்துப் பொறுப்பதிகாரி, கடமைக்கு இடையூறு எனத் தெரிவித்து அந்தச் சாரதியை கழுத்தைப் பிடித்து இழுத்துக் கைதுசெய்துள்ளார். இந்தச் சம்பவத்தால் நேற்று அந்தப் பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டது. (அ-ம-110-18)

## இலங்கைப்...

சன்யன் தெரிவித்ததாவது:-

இலங்கையின் பொருளாதாரம் இந்த வருடத்தில் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும். அமெரிக்காவால் விதிக்கப்படும் தீர்வை வரிகள் தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால், இந்தத் தீர்வை வரிகளுக்கு அமெரிக்கா விலக்கு வழங்குவதற்குச் சந்தர்ப்பம் அதிகம் உள்ளது. ஆதலால், இலங்கைக்கு குறைந்தளவு பாதிப்பே அதனால் ஏற்படும்.

இதேவேளை, இலங்கையின் நிதியியல் மற்றும் நாணயக்கொள்கை முகாமைத்துவம் என்பன மிகச் சிறப்பாகக் காணப்படுகின்றன. அத்துடன், இலங்கையின் கடன்களும், பணவீக்கமும் குறைவடைந்துள்ளன. இலங்கையின் பொருளாதாரம் நீண்டகாலம் வளர்ச்சிப் பாதையில் செல்லவேண்டுமாயின் தற்போதைய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து முன்னெடுப்பது அவசியம் - என்றார். (அ-ம-இ)

## விபத்தில்...

உயிரிழந்துள்ளார். வீதியில் நிறுத்தப்பட்டிருந்த உழவியந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (அ-ம-125)

## விளையாட்டுப்...

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ், இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் நேற்று உரையாடியுள்ளார். இதன்போதே, குறித்த பயிற்சியாளரை விரைவில் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்ற வாக்குறுதியை அவர்கள் வழங்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்ட பின்னர், இன்னமும் சந்தேகநபர் கைது செய்யப்படாமைக்கு, சிறுவர்களின் பெற்றோர் கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-214-125)

## எம்மைத்தவிர...

தெரிவித்துள்ளார். உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, கண்டியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுர இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்ட பரஸ்பர வரிக்கொள்கை இலங்கையில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. அமெரிக்காவின் தீர்வை வரிக்கொள்கை, அல்லது வேறு விதத்திலான பொருளாதார நெருக்கடிகள் அல்லது பெருந்தொற்று நிலைமைகள் எமது பொருளாதாரத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அதனால் நாம் என்ன செய்யவேண்டும்? எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாக்குபிடிக்கக்கூடிய தளம்பாத பொருளாதாரத்தை நாட்டில் உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

சடுதியான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்வது தொடர்பில், திறைசேரியின் செயலாளரும் முன்மொழிவுகளை வைத்துள்ளார். அது தொடர்பிலும் நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம். சர்வகட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துகளையும் கேட்டறிந்துள்ளோம். மீண்டும் நாட்டில் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். எம்மைத்தவிர இந்தப் பயணத்தை நேர்த்தியாக முன்னெடுக்கக் கூடியவர்கள் என எவருமில்லை - என்றார். (அ-ம-44)

## வடமராட்சியில்...

துள்ளார். கற்களுடன் சென்ற டிப்பர் வாகனத்தின் மீது, பின்னால் சென்ற மோட்டார்சைக்கிளில் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்த குறித்த நபர், அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது, இடைநடுவில் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி பிரதான வீதியிலிருந்து 100m தூரமுள்ள ஏழு பரப்பு 10 1/2 குளியும் விற்பனைக்குண்டு.
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- **077 720 7097**

## வீடும், காணியும் விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் 3 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

**074 231 1690, 074 356 1575**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
Whats app:-
**+61 421 290 240**

(CS/57926) J-1

## நீர்கசிவினை தடுக்க சிறந்த தீர்வு

உங்கள் வீட்டிற்கும் வணிகக் கட்டிடத்திற்கும் நீர்க்கசிவு ஒரு பெரிய பிரச்சனையா?, நவீன தொழில்நுட்பத்துடன் தரமான பொருட்களைக் கொண்டு உங்கள் கட்டிடத்தினை நீண்ட காலம் பாதுகாக்க எமது சேவையினை வழங்குகிறோம்

FINEX ENGINEERING ( PVT ) LTD
இல. 51 பலாலி வீதி யாழ்ப்பாணம்
0766558674, 0775802508
FINEX

நம்பகமான நீடித்த தீர்வுகள் (விலை தள்ளுபடிக்கு FI/JF/042025 இந்த குறியீட்டினை பயன்படுத்தவும்) நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

## பராமரிப்பாளர் தேவை

குழந்தை பராமரிப்பதற்கும், வீட்டு வேலைகளுக்கும் வீட்டோடு தங்கி நின்று வேலை செய்யும் பராமரிப்பாளர் தேவை.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 925 1728**

## காணி விற்பனைக்கு

இல.386, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் ஐந்து சந்திக்கு அருகாமையில் 19 அடி அகலம் 210 அடி நிளம் கொண்ட கடைகட்டடம் விற்பனைக்குண்டு. விலை 4 1/2 கோடி
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- **077 759 0799**

## தொழில் தொடங்கும், இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

சங்கரத்தை முருகமூர்த்தி கோவிலுக்கு அண்மையில் உள்ள ரட்ணசிங்கம் மணிமண்டபத்தை தொழில் தொடங்கும் இளைஞர்களுக்கு வரப்பிரசாதமாக வழங்கவுள்ளோம்.

- ☆ திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள்
- ☆ பிறந்தநாள் கொண்டாட்டங்கள் போன்றவற்றை நடத்தலாம்

**அல்லது**

- ☆ தனியார் அலுவலகமாகவோ சிறிய தொழிற்சாலையாக பயன்படுத்தவும் முடியும்.

**குறிப்பிட்ட காலத்திற்கு வாடகை இலவசம்**

- ☆ 3 பேஸ் மின்சாரம், இரண்டு அலுவலகம், மலசலகூடவசதி, வாகனத்தரிப்பிடம் மேலும் பல வசதிகளுடன்

மேலதிக தொடர்புகளுக்கு:
**076 017 1951, 0044 795 6377 627** (Whatapp)
**077 662 5516**

(cs 57858 ) J-1

# காசாவில் பேரவலம்

காசாவில் கிட்டத்தட்ட 60 ஆயிரம் குழந்தைகள், கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்கொண்டுள்ளன என்று பலஸ்தீன போர்க் கண்காணிப்பகம் தகவல் வெளியிட்டுள்ளது. (ம)

# புகலிடம் நிராகரிப்பு

இத்தாலியில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 40 பேர், அல்பேனியாவில் இத்தாலியால் நடத்தப்படும் தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (ம)

## விற்பனைக்கு

386 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் ஐந்து சந்திக்கு அருகாமையில் கட்டிடம், கட்டிடத்தின் கூரை என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **077 002 2251**

## காணி விற்பனைக்கு

நீர்வேலி, சிறுப்பிட்டியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
ஒரு பரப்பின் விலை 12 இலட்சம்.
தொடர்புகளுக்கு:

**077 820 9424**

(CS/30006) J-1

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கே.கே.எஸ் வீதி ஆகிய பகுதிகளில் கடை ஒன்று வாடகைக்கு தேவை

**077 919 1529**

Willow Recruitment London (Private) Ltd

STUDY. TRAVEL. SUCCEED.

எமது அலுவலகங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் உள்ளன

**STUDENT VISAS**

- ✔ இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஐரோப்பியா மற்றும் பல நாடுகளில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் பயிலும் வாய்ப்பு
- ✔ நிரந்தர குடியுருமைக்கான வழிகாட்டல்
- ✔ IELTS இன்றி அல்லது குறைந்த IELTS உடன் விண்ணப்பிக்கலாம்
- ✔ Scholarship வழங்கப்படும்
- ✔ விரைவாக மற்றும் இலகுவாக பல்கலைக்கழக அனுமதி மற்றும் விசாக்களை பெற்றுக்கொள்ளலாம்

**VISIT VISAS**

- ✔ இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பியா மற்றும் பல நாடுகளுக்கான சுற்றுலா விசா
- ✔ தம்பதிகள் மற்றும் குடும்பங்களுக்கான விண்ணப்பங்கள்
- ✔ இலகுவான ஆவணப்படுத்தல் செயல்முறை
- ✔ உயர் விசா வாய்ப்பு
- ✔ Low Bank Balance Options

BRITISH COUNCIL



CALL US NOW

கொழும்பு | 0114 442 240 | 0778941776
யாழ்ப்பாணம் | 0212 052 947 | 0719789119

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள குளியலறை பொருட்கள், மாபிள் மற்றும் பிளம்பிங் பொருட்கள் விற்பனை செய்யும் வியாபார நிலையத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு பணியாளர்கள் தேவை. ஆண்கள் மட்டும்

1. சாரதி
2. சிட்டை எழுதுநர் (கணினி அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது)
3. விற்பனை உதவியாளர்.
4. கூலியாள் (பொருட்களை ஏற்றுபவர்)

தெதாடர்புகளுக்கு:
**077 501 0821, 076 135 9300**
6.00 pm - 9.00 pm வரை தொடர்பு கொள்ளவும்.
வெளிமாவட்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவில் வீதியில் 3 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு.
நல்லூர் சங்கிலியன் வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **077 794 8012**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இருபாலையில் 5 பரப்பு காணி உடனடி விற்பனைக்கு.

**077 984 8786**

## தங்குமிட விடுதியும், மண்டபமும் வாடகைக்கு உண்டு




கல்வியங்காட்டில் விளையாட்டரங்க வீதியில் (GPS - Road) தங்கும் விடுதியும், நிகழ்வுகளுக்கான மண்டபமும் வாடகைக்கு உண்டு.

**077 930 0083**
**076 525 4405**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

எனக்குத்தாய் ஆகியாள் என்னைஈங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்; – தனக்குத்தாய்
ஆகியவளும் அதுவானாள் தாய்த்தாய்க்கொண்டு
ஏகும் அளித்திவ் வுலகு.

– நாலடியார்

மலர்: 34 வள்ளுவர் ஆண்டு : 2055 பங்குனி 30 ஞாயிற்றுக்கிழமை (13.04.2025) சிகரம் :140

# இந்தியப் பிரதமரின் வருகை: அநுர யாரோடு ?

○ நிலாந்தன்



நான்கு தடவைகள் இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வந்துவிட்டார். இந்த நான்கு தடவைகளிலும் அவர் நான்கு இலங்கை ஜனாதிபதிகளைச் சந்தித்திருக்கிறார். பத்தாண்டு காலத்துக்குள் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பு நான்கு பேர்களிடம் கைமாறும் அளவுக்கு இந்தச்சிறிய தீவின் அரசியல் ஸ்திரமற்றதாக இருந்துவருகிறது. ஆனாலும் பிரதமர் மோடியின் வருகையின்போது மாறாத இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று இனப்பிரச்சினை தொடர்பான இந்திய நிலைப்பாடு. இரண்டாவது,மீனவர்களின் விவகாரம். அதுவும் தமிழ் மக்களோடு தொடர்புடையதுதான். இந்தியப் பிரதமரின் வருகையை மூன்று தளங்களில் வைத்துப் பார்க்கவேண்டும். முதலாவது பிராந்தியத் தளம். இரண்டாவது கொழும்பு. மூன்றாவது தமிழ் நோக்குநிலை.

பிராந்தியத்தில் இந்தியா "அயலவர் முதலில்" என்று கூறிக்கொள்கிறது. ஆனால் நடைமுறையில் அதன் அயலில் உள்ள சிறிய நாடுகளை இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துக்குள் இருந்து சீனா எங்கே கழற்றி எடுத்துவிடுமோ என்ற நிச்சயமின்மைதான் காணப்படுகின்றது. நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவுகள் ஆகிய மூன்று நாடுகளிலும் இந்தியாவின் பிடி சகடயோகமாகத்தான் இருக்கிறது. இலங்கையிலும் அப்படித்தான். இப்பொழுது இலங்கையில் ஆட்சி செய்துகொண்டிருப்பது சீன இடதுமரபில் வந்த ஜேவிபியை அடித்தளமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்திதான்.

இப்படிப்பட்டதோர் பிராந்தியப் பின்னணிக்குள் இந்தியப் பிரதமரின் வருகையின்போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள்,காணொலிகளில் பிரதமர் மோடிக்கு அருகே அநுர பணிவான ஓர் இளைய சகோதரனைப்போலவே காணப்படுகிறார். அயலில் உள்ள சிறிய நாடுகளுக்கும் தனக்குமான பிடி சகடயோகமாகக் காணப்படும் ஒரு பின்னணிக்குள் இலங்கைத்தீவில் தேசிய மக்கள் சக்தியை எப்படித் தன் செல்வாக்கு மண்டலத்துக்குள் பேணுவது என்பதுதான் இப்பொழுது இந்தியாவுக்குள்ள பிரதான சவால். இது முதலாவது.

இரண்டாவது,கொழும்பு.இப்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் பொருளாதார நெருக்கடியின் குழந்தை.பொருளாதார நெருக்கடியைத் தீர்க்காவிட்டால் அதற்கு எதிர்காலம் இல்லை. சில தசாப்தங்களுக்கு முன்பு இந்திய விஸ்தரிப்பு வாதத்துக்கு எதிராகக் காணப்பட்ட ஜே.வி.பி.க்கு இப்பொழுது இந்தியா தொடர்பான அதன் கொள்கைகள் மாறியிருப்பதைக் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் இலங்கைக்கான சீனத்தூதுவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தார்.அவர் இங்கு ஆட்சி மாற்றத்துக்கு தமிழ் மக்கள் நல்கிய ஆதரவைப் பாராட்டிப் பேசினார். அதாவது சீனா, புதிய அரசாங்கத்தை எதிர்பார்ப்போடு பார்க்கிறது என்று பொருள்.இந்த எதிர்பார்ப்பானது ஏற்கனவே தனக்குள்ள இந்தியாவின் எதிரி என்ற படிமத்தைப் புதுப்பிக்கக்கூடியது என்பது தேசிய மக்கள் சக்திக்குத் தெரிகிறது.எனவே பேரரசுகளின் இழுவிசைகளுக்குள் சிக்காமல் எப்படிப் பொருளாதாரத்தை நிமிர்த்துவது என்பதுதான் அவர்களுக்குள்ள சவால்.அதை நோக்கியே அவர்கள் இந்தியாவை அணுகுவார்கள். மேலும் இந்தியாவை அரவணைப்பதன்மூலம் இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவிடம் இருந்து வரக்கூடிய அழுத்தங்களையும் அவர்களால் குறைக்கலாம்.

மூன்றாவது தமிழ் நோக்குநிலை.கடந்த 15 ஆண்டுகளிலும் இந்தியா தமிழர் தொடர்பான அதன் நிலைப்பாட்டில் எந்த மாற்றத்தையும் காட்டியிருக்கவில்லை.13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவேண்டும் அல்லது யாப்பில் இருப்பதை அமுல்படுத்தவேண்டும் என்பதுதான் இந்தியாவின் நிலைப் பாடாகக் காணப்படுகின்றது.ஆனால் இந்தக் கோரிக்கையை இந்தியா கொழும்பிடம்தான் முன்வைக்கவேண்டும். அதுமட்டுமல்ல, இந்தியாவுக்கும் அதில் கூட்டுப்பொறுப்பு உண்டு.13ஆவது திருத்தம் என்பது இந்தியாவின் குழந்தை.எனவே கடந்த 15 ஆண்டுகளாக ஏன் அதனை முழுமையாக அமுல்ப்படுத்தவில்லை என்ற கேள்வியை இந்தியா கொழும்பிடமும் தன்னிடமும்தான் கேட்டுக்கொள்ள வேண்டும். இலங்கைத்தீவின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையின் கீழ் 13ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது.ஆனால் கடந்த 38 ஆண்டுகளாக அந்த நிறைவேற்று அதிகாரம் அந்தத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தாமல் தடுப்பதற்குத்தான் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது யாப்புக்கு எதிராகத்தான் நிறைவேற்று அதிகாரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டதோர் அபகீர்த்தி மிக்க யாப்புப் பாரம்பரியத்தை கொண்ட ஒரு நாட்டிடம் திரும்பத் திரும்ப 13ஐ அமுல்படுத்து என்று ஏன் இந்தியா கூறிக் கொண்டிருக்கிறது?

தமிழ் மக்களின் பக்கம் நிற்பதன் மூலம் கொழும்பைப் பகைத்துக் கொள்ள இந்தியா தயாரில்லை. 13ஆவது திருத்தம் என்பது இலங்கைத்தீவில் இந்தியாவின் இயலாமையைக் காட்டும் ஒரு குறியீடுதான். இந்த விடயத்தில் 13ஆவது திருத்தம் மற்றும் இந்திய இலங்கை உடன்படிக்கை தொடர்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு பொருத்தமானது. கடந்த வாரம் இந்தியப் பிரதமரைச் சந்தித்தபின் கஜேந்திரகுமார் பின்வருமாறு கூறியிருக்கிறார்..."இலங்கைத் தீவில் இந்தியாவுக்கு மட்டும்தான் அதன் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் ஒரு பார்வை;பங்களிப்பு;உரித்து இருக்க முடியும் என்பதை நாங்கள் ஏற்று அங்கீகரிக்கின்றோம்...வேறு எந்த நாட்டுக்கும் தங்களுடைய தேசியப் பாதுகாப்பு என்ற அடிப்படையில் இலங்கையை அணுகும் உரிமையோ,அருகதையோ இல்லை என்பதே எங்கள் நிலைப்பாடு என்பதை வெளிப்படுத்தினோம்....இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு என்ற அம்சத்தில் இலங்கைத் தீவு இந்தியாவுக்கு மற்றைய நாடுகளை விட முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டைக் குறிப்பிட்டோம்....விசேடமாக வடக்கு,கிழக்கில் அந்த உரிமை இந்தியாவுக்கு இருக்கின்றது என்பதை நாங்கள் அங்கீகரிக்கின்றோம் என்பதை இந்தச் சந்திப்பில் சொன்னோம்...." இது முன்னணியின் புதிய நிலைப்பாடு அல்ல. இந்திய - இலங்கை உடன்படிக்கை தொடர்பாக முன்னணி தொடர்ச்சியாக இதே கருத்தைத்தான் கூறிவருகிறது. இந்தியாவின் பிராந்திய நலன்களைப் பாதுகாக்கும் நோக்கிலான அந்த அணுகுமுறை மிகவும் தெளிவானது; பொருத்தமானது.

கடந்த 15 ஆண்டுகளாக இந்தியா தமிழ் மக்களின் பக்கம் நிற்பதன்மூலம் கொழும்பைப் பகைத்துக்கொள்ளத் தயாரில்லை என்ற செய்தியை தொடர்ச்சியாக வெளிப்படுத்திவருகின்றது. ஆனால் இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துக்குள் சீனா எப்பொழுதோ நுழைந்துவிட்டது.அம்பாந்தோட்டைத்துறைமுகத்தை சீனா 100ஆண்டு குத்தகைக்குப் பெற்றுவிட்டது. கொழும்பில் ஒரு துறைமுக நகரத்தைக் கட்டியெழுப்பிவருகிறது.


இப்படிப்பட்டதோர் உள்நாட்டுப் பிராந்திய மற்றும் உலகளாவிய அரசியல் சூழலின் பின்னணியில் வைத்தே இந்தியப் பிரதமரின் வருகையை விளங்கிக்கொள்ளவேண்டும்.ஜே .வி.பி.யின் முதலாவது ஆயுதப் போராட்டத்தை நசுக்குவதற்கு சிறீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்துக்கு சீனா ஆயுதங்களை வழங்கியது. ஆனால் அதே சீனாதான் ஜே.வி.பி.க்கு கொம்யூனிச புத்தகங்களையும் வழங்கியது.ஜே.வி.பி.யின் முதலாவது போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின் சிறைவைக்கப்பட்ட ஜே.வி.பி.க்காரர்களிடம் ஒரு சிறை அதிகாரி என்னென்ன புத்தகங்கள் வாசிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.அவர்கள் ஒரு பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள்.அநேகமானவை சீன கொம்யூனிசப்புத்தகங்கள். அந்தப்புத்தகங்களை வாங்கிக்கொண்டு வந்து அவர்களுக்கு கொடுத்த அந்த அதிகாரி சிரித்துக்கொண்டே தன் கையில் வைத்திருந்த ரி-56 ரக ரைபிளைக் காட்டிச் சொன்னாராம்,"சீனா உங்களுக்கு இந்தப் புத்தகங்களைத் தந்தது, எங்களுக்கு இந்தத் துவக்கைத் தந்தது" என்று . இதுதான் அரசியல்.

அன்றைக்கு சீனா மட்டுமல்ல இந்தியாவும் சிறீமாவோவின் அரசாங்கத்துக்கு ஆதரவாக நின்றது. இது நடந்தது கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு முன்பு. அதன்பின் இந்தியஇலங்கை உடன்படிக்கை கைச்சாத்தாகிய பின் ஜே.வி.பி. அதன் இரண்டாவது போராட்டத்தைத் தொடங்கியது.அது முழுக்க முழுக்க இந்தியப் படையினரின் பிரசன்னத்துக்கு எதிரானது.அந்த இரண்டாவது போராட்டத்தோடு ஜே.வி.பி.யின் ஆயுதப்போராட்ட முனைப்பு முற்றாக நசுக்கப்பட்டது. இவ்வாறு சீன இந்திய உதவிகளோடு நசுக்கப்பட்ட ஒரு அமைப்பு, இப்பொழுது இந்தியப் பிரதமருக்கு கௌரவப் பட்டத்தை வழங்குகிறது. இதுதான் அரசியல். அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை; நிரந்தரப் பகைவர்களும் இல்லை. சிங்கள மக்கள் ஓர் அரசுடைய தரப்பு.பெரிய இனம். ஆனால் ராஜதந்திரம் என்று வரும் பொழுது விவேகமாக முடிவுகளை எடுக்கின்றார்கள்.அரசற்ற சிறிய இனமாகிய தமிழ் மக்களும் விவேகமான முடிவுகளை எடுக்கவேண்டும்.

விவேகமான முடிவென்பது 13ஐ ஏற்றுக்கொள்வதோ அல்லது "ஏக்கிய ராஜ்ஜிய"வை ஏற்றுக்கொள்வதோ அல்லது நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டத்தைக் கைவிடுவதோ அல்ல. உடனடியாகவும் முதலாவதாகவும் ஒரு முடிவை எடுக்க வேண்டும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் கொடுத்த வெற்றி நிரந்தரமானது அல்ல என்பதனை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் நிரூபிக்கவேண்டும். மோடியின் வருகையையொட்டி தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் ஒருவர் ஆங்கிலத்தில் முகநூலில் பின்வருமாறு எழுதியிருந்தார்...."தென்னாசியாவின் சக்தி மிக்க தலைவர்கள். ஒருவர் தனது சிறுபிராயத்தில் புகையிரதத்தில் தேநீர் விற்றவர்.மற்றவர் புகையிரதத்தில் சிற்றுண்டிகள் விற்றவர். இருவருமே ஒரு காலம் அரசியல் இயக்கங்களின் உறுப்பினர்களாக இருந்தவர்கள்.ஒன்று ஆர்.எஸ்.எஸ். அதிலிருந்து பி.ஜே.பி. எழுச்சி பெற்றது.மற்றது,ஜே.வி.பி. அதிலிருந்து என்.பி.பி. எழுச்சி பெற்றது. இரண்டு கட்சிகளுக்கும் கொள்கைகள் வேறு வேறாக இருந்தாலும், இரண்டு கட்சிகளுமே ஊழலுக்கும் சுதந்திரத்திற்கு பின் தத்தமது நாடுகளில் ஆதிக்கம் செலுத்திய உயர் குழாத்துக்கும் எதிரானவை.இந்த இரண்டு ஜதீகப்பண்புமிக்க தலைவர்களும் தென்னாசியாவின் எதிர்காலத்தை வடிவமைக்கக்கூடும்." இப்படிப்பட்ட பிராந்தியக் கனவு ஏதாவது தேசிய மக்கள் சக்தியிடம் இருக்குமாக இருந்தால் முதலில் அவர்கள் உள்நாட்டில் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். ஏனென்றால் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்றால் முழு இலங்கைக்கும் பாதுகாப்பு இல்லை அதுமட்டுமல்ல இந்தப் பிராந்தியத்துக்கும் பாதுகாப்பு இல்லை என்பதுதான் கடந்த 15 ஆண்டுகால அனுபவமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்த்தேசியத்தைக் கருவறுக்கவே

# இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம்

அ.நிக்ஸன்

ஐந்து ஆண்டுகளுக்கான இந்திய- இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தின் முழுமையான மற்றும் உண்மையான உள்ளடக்கம் தெரியாதவொரு நிலையில், வடக்கு, கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தியதாகவே அது அமைந்திருப்பதாகத் தெரிகிறது. ஏனெனில் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் வெளியிட்டுள்ள விபரங்கள் பல அர்த்தங்களைத் தருகின்றன. அவற்றினடிப்படையில் இரு பிரதான பொருள்கோடல்களைக் காணமுடிகிறது.

ஒன்று, இலங்கைத்தீவின் உள்ளக விவகாரங்களில் புதுடில்லி தலையிடுவதைத் தவிர்த்தல். அதாவது இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய விவகாரங்களில் 13 ஆவது திருத்தச்சட்டத்தைக்கூட பேசவேண்டிய அவசியம் இல்லை என்ற உட்கருத்து விஜித ஹேரத்தின் விளக்கத்தில் இருந்து புரியக்கூடியதாகவுள்ளது.

இரண்டாவது, ஈழத்தமிழ் மீனவர்கள் தமிழக மீனவர்கள் மோதும் விவகாரங்கள் ஒப்பந்தத்தில் இல்லை. அது வெறுமனே மீனவர் பிரச்சினை என்ற தொனி மாத்திரமே வெளிப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இந்தியக் குடியரசுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புக் குறித்த ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமே தவிர, ஒரு முறையான பாதுகாப்பு ஒப்பந்தம் அல்ல என்றும் ஹேரத் விளக்குகிறார்.

ஆக இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்பது இரு நாடுகளினதும் பாதுகாப்பு ஒத்துழைப்புக் குறித்த புரிதல் மாத்திரமே. ஒப்பந்தத்தின் கீழ் இந்திய - இலங்கை ஆகிய இரு அரசுகளினதும் இறையாண்மை, சமத்துவம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மதிக்கவேண்டும் என்ற அம்சம் பிரதானமாகும். எந்த நாடும் உள் விவகாரங்களில் தலையிடக்கூடாது என்ற வாசகம் மிக முக்கியமான விடயப்பரப்பாக ஒப்பந்தத்தில் பிரகாசிக்கிறது. இந்திய - இலங்கை இராணுவக் கூட்டுப்பயிற்சிகள், மனிதக்கடத்தல், போதைப்பொருள் மாபியாக்கள் பற்றிய தகவல் பகிர்வு மற்றும் இராணுவக் கூட்டுத் திட்டங்கள், அது பற்றிய ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல் போன்ற விடயங்களும் ஒப்பந்தத்தில் உள்ளன.

இந்தியாவுடன் வேறு எந்த பாதுகாப்பு வாக்குறுதிகளுக்கும் இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை என்று விஜித ஹேரத் பெருமையுடன் மார் தட்டியுமுள்ளார். இந்திய - இலங்கையின் தேசிய பாதுகாப்பு என்ற விடயத்துக்குள் இனப்பிரச்சினை மற்றும் அதனால் எழும் போராட்டங்கள் அல்லது அழுத்தங்கள் பற்றிய விவகாரங்கள் போன்றவற்றில் புதுடில்லியும் கொழும்பும் இணைந்து எடுக்கும் முடிவுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த முக்கியத்துவத்துக்குள் இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்பை அச்சுறுத்தும் வகையில் இலங்கைத்தீவின் எந்தவொரு தளமும் பயன்படுத்தப்படமாட்டாது என்பதும் எந்தவொரு வல்லரசுகளின் கப்பல்களும் தேவையானபோது இலங்கைத்தீவின் துறைமுகங்களுக்கு வந்து செல்ல முடியும் என்பதும் புரிந்துணர்வு அம்சமாக ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

எந்தவொரு வல்லரசு நாடுகளுக்கு எதிராகவும் இலங்கைத் தீவை பயன்படுத்தமுடியாதென இந்திய - சீன அரசுகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார உறுதியளித்துள்ளாரென அமைச்சர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் இறைமை, தன்னாதிக்கம் என்ற கட்டமைப்பை ஒருபோதும் எவருடனும் சமரசம் செய்யமுடியாது என்ற கடும் தொனியை விஜித ஹேரத் வெளிப்படுத்தினார். அதாவது 'சமஷ்டி ஆட்சி' 'சுயநிர்ணய உரிமை' என்ற பேச்சுக்கே இடமில்லை. அதற்கு இந்தியாவும் இணங்கியுள்ளது என்பதை விஜித ஹேரத் சொல்லாமல் சொல்கிறார்.

இலங்கையின் இறைமை பிரிக்கப்படமுடியாது என்றும் உள்நாட்டு விவகாரங்களில் எந்தவொரு நாடுகளும் தலையிடமுடியாது எனவும் அமைச்சர் விஜித ஹேரத் அடித்துக் கூறியபோது நாடாளுமன்றத்தில் இருந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் உறுப்பினர்கள் எவரும் வாய் திறக்கவில்லை. ஆக, இங்கே 'இனப்பிரச்சினை விவகாரம்' என்பது இந்திய இலங்கை அரசுகளின் தேசியப் பாதுகாப்புடன் தொடர்புடையது என்பதும், பொருளாதார ரீதியான திட்டங்கள் மாத்திரமே இலங்கையில் மீள் நல்லிணக்கத்தைக் கொண்டுவரும் என்ற அர்த்தப்பாடுகளும் விஜித ஹேரத்தின் விளக்கவுரையின் பொருள்கோடலாக அமைந்துள்ளன.

அதேநேரம் இந்திய -இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக சீனா பதிலளிக்க ஆரம்பித்துள்ளதாக முன்னிலை சோசலிசக் கட்சி கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளது. ஒப்பந்தத்தை விமர்சித்துள்ள கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட, பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தைகளை சீனா ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். அதாவது இலங்கை இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளதால் சீனா இலங்கையைச் சந்தேகிக்கிறது என்றும், சீனா, இலங்கையை ஒரு அமெரிக்க இந்திய நட்பு நாடாக அவதானிக்கத் தொடங்கியுள்ளதாகவும் புபுது ஜயகொட எச்சரிக்கிறார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மையக் கட்சியான ஜே.வி.பி.க்கு இன்று சவால்மிக்க போராட்டச் சக்தியாக முன்னிலை சோசலிசக் கட்சி மாறியுள்ள நிலையில், இந்தியாவுடன் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றியும் அதன் ஆபத்துகள் தொடர்பாகவும் மேலும் புதிய தகவல்களை இக் கட்சி வெளியிடும் என்று எதிர்பார்க்கமுடியும்.

கோத்தாபய ஜனாதிபதியாக இருந்தபோது, 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்திய இலங்கை அரசுகள் கடல்சார் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. அதனைக் கடுமையாக அன்று எதிர்த்த ஜே.வி.பி. இன்று 'இலங்கையின் இறைமையைப் பாதுகாத்தல் என்ற அடிப்படையில் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருப்பது அரசியல் வேடிக்கைதான். 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தீயிட்டதும் இந்த ஜே.வி.பி.தான். ஆனாலும் இந்திய அரசு, ஈழத்தமிழர்கள் உள்ளிட்ட இலங்கைத்தீவு விவகாரத்தில் எந்தவொரு சிங்கள ஆட்சியாளர்களோடும் ஒத்துப்போக வேண்டும் என்ற கொள்கையைப் பின்பற்றுவதையும் இந்த ஒப்பந்தம் பகிரங்கப்படுத்தியுள்ளது.

குறிப்பாக இந்திய தேசியப் பாதுகாப்பு மற்றும் இந்தோ - பசுபிக் பிராந்திய பாதுகாப்பு என்ற இரு விடயங்களில் இந்தியாவோடு இலங்கை இணையவேண்டும் என்ற கடுமையான நிலைப்பாடு புதுடில்லியிடம் உண்டு. இந்தியாவின் இந்தக் கொள்கை ஒருவகையில் அமெரிக்க நிலைப்பாடு சார்ந்தது என்ற முடிவுக்கும் வரலாம். ஏனெனில் இந்தோ - பசுபிக் பாதுகாப்புக்காக இந்தியாவைப் பிரதானப்படுத்தி அமெரிக்கா உருவாக்கியுள்ள 'குவாட்' இராணுவக் கூட்டணி, சீனாவை முற்றிலும் எதிர்க்கும் நோக்கிலானது. ஆகவே இந்தப் பின்னணியில் இலங்கையை எந்த விலை கொடுத்தாயினும் இந்தியா அரவணைக்க வேண்டும் என்ற நியதியுள்ளது.

2022 இல் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளராக இருந்த கேணல் நளின் ஹேரத், இந்திய தேசிய பாதுகாப்பு விவகாரத்தில் இலங்கை அதிக கவனம் செலுத்தும் என்றும், கோத்தாபய புதுடில்லிக்கு வழங்கியிருந்த உறுதிமொழிகள் பற்றியும் விபரித்திருந்தார்.

ஆக இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரை இலங்கையில் எவர் ஆட்சியில் இருந்தாலும் இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரத்தில் இலங்கையை தங்கள் பக்கம் வைத்திருக்கும் அணுகுமுறையைக் கையாளுகின்றது என்பது நிதர்சனமாகிறது.


இந்தப் பின்புலத்திலேதான் ஜே.வி.பி.யையும் இந்தியா அணுகியுள்ளது. ஆனால் ஈழத்தமிழர் விவகாரத்தில் ஜே.வி.பி. என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறதோ அதே எண்ணக்கருவுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கியுள்ளதை கைச்சாத்திட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் வெளிச்சம் போட்டுக் காண்பித்துள்ளது. இந்த ஒப்பந்தத்தை வைகோ உள்ளிட்ட தமிழக அரசியற்தலைவர்கள் சிலர் கண்டித்திருக்கின்றனர். இன அழிப்பில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சி அளிக்கும் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இந்தியா ஏன் கைச்சாத்திட்டது ?என்று வைகோ கேள்வி எழுப்பியுள்ளார். ஆனால் தமிழ்த்தேசியக் கட்சிகள் எதுவும் ஒப்பந்தத்துக்கு இதுவரை எதிர்ப்பு வெளியிடவேயில்லை.

ஏனெனில் இந்தியாவை நேரடியாக எதிர்க்கும் தற்துணிவு தமிழ்த்தேசியக் கட்சிகளிடம் இல்லை. தமிழக அரசியற் கட்சிகள் கூட, புதுடில்லி, இந்திரா காந்தி காலத்தில் இருந்து இன்றைய மோடிவரை ஏன் ஈழத்தமிழர்களுக்கு எதிரான இலங்கையின் எண்ணப்பாட்டுக்கு ஏற்ப இயங்குகின்றது என்ற எந்த ஆய்வுகளும் இன்றி வெறுமனே கோஷமிடுகின்றன. 1987 ஆம் ஆண்டு செய்யப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இருந்து இன்றுவரை வெறும் எதிர்ப்புகளை மாத்திரமே காணமுடிகிறது. ஆனால் இந்தியாவும் இலங்கையும் இன்றுவரை தாம் நினைத்த அரசியலை இலாபத்தை நோக்கி கன கச்சிதமாகக் காய்நகர்த்தி வருகின்றன. குறிப்பாக 'இலங்கை ஒற்றை ஆட்சி அரசு' என்ற கட்டமைப்பை இந்தியா பாதுகாக்கிறது.

அரசுக்கு அரசு என்ற அணுகுமுறையின் ஊடே தத்தமது பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் போன்றவற்றிலும் இந்திய இலங்கை அரசுகள் தங்கள் நலன்களைப் பரிமாறி வருகின்றன. அதிலும் ஜே.வி.பி. ஈழத்தமிழர்களுக்கு எதிரான தமது அரசியல் நிலைப்பாட்டை இந்திய - இலங்கை பாதுகாப்பு என்ற சர்வதேச ஒப்பந்தம் மூலமாக நிறுவியுள்ளமை அவர்களுடைய அரசியல் சாணக்கியத்தைக் காண்பிக்கிறது. இந்த ஒப்பந்தத்தை பிரதான எதிர்க்கட்சிகள் கண்டித்திருந்தாலும், ஜே.வி.பி.யின் சாணக்கியத்தின் ஊடாகப் பெறப்பட்ட இந்த இலாபங்களை அவர்களும் பயன்படுத்துவர் என்பது வெளிப்படையானது.

ஏனெனில் 'தமிழ்த் தேசியம்' என்பதை முற்றாக அழிக்க வேண்டும் என்பது சிங்கள அரசியற் கட்சிகளின் நீண்டகால கனவு. இக் காரண காரியத்தாலேயே, கட்சி முரண்பாடுகளுக்கு அப்பால் சிங்கள அரசியற் தலைவர்கள் ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் ஒரு புள்ளியில் நிற்கின்றனர். இதனையே இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் அம்பலப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி

## பரபரக்கும் தமிழக அரசியற் களம்

மயூ

சமீபத்தில் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. இடையே கூட்டணி உருவாகும் சாத்தியம் குறித்து தமிழக அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. கடந்த 6ஆம் திகதி தமிழகம் சென்ற பிரதமர் மோடி, எடப்பாடி பழனிச்சாமியையும், ஓ. பன்னீர்செல்வத்தையும் தனித்தனியே சந்தித்த விடயம், அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. கூட்டணியை உறுதிப்படுத்தியிருக்கின்றது என்று அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமி அண்மையில் புதுடில்லி சென்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு "மாநில நலன்" தொடர்பானது என பழனிச்சாமி தெரிவித்தாலும், வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் இரு கட்சிகளும் கூட்டணி வகிக்கும் வாய்ப்பு குறித்தே பேச்சு நடந்தப்பட்டிருக்கலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்ட கருத்துகளும் கூட்டணித் திசையையே சுட்டிக்காட்டின.

கூட்டணி தொடர்பாக இதுவரை விரிவாக கருத்துத் தெரிவிக்காத பா.ஜ.க. மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை, கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில், "பா.ஜ.க.வின் தொண்டனாகப் பணியாற்ற தயார் என தலைமையிடம் தெரிவித்துள்ளேன்" என்று கூறியிருக்கின்றார். 2019ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களில் அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணி உடைந்ததற்கு அண்ணாமலையின் கடும் விமர்சனங்களே காரணம். எனவே, இப்போது மீண்டும் கூட்டணி உருவானால், அவரது பங்கு என்னவாகும் என்பது கேள்வியாக இருக்கும் சூழலில், "கூட்டணி தொடர்பாக நான் எதுவும் கூற விரும்பவில்லை. அமித் ஷா கூறியதே இறுதிக் கருத்து" என அண்ணாமலை தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை, இந்தக் கூட்டணி முயற்சிக்கு அண்ணாமலையின் தலைமைத்துவத்தை ஓர் இடையூறாக அ.தி.மு.க. கருதினால், அவரது பதவியைப் பலிகொடுக்கவும் பா.ஜ.க. தயங்காது என்றே தெரிகின்றது. அதனாலேயே "பா.ஜ.க.வின் தொண்டனாகவும் பணியாற்ற தயார்" என்று அண்ணாமலை சூசகமாக, தனது தலைமைப்பதவி பறிபோவதை உணர்த்தியிருக்கிறார் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் சொல்கின்றனர். இதுவரை இரு கட்சிகளும் அதிகாரபூர்வமாக எதையும் உறுதிப்படுத்தாவிட்டாலும், பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலையின் சமரசப்போக்கும், மத்தியமாநில தலைவர்களின் சந்திப்புகளும் கூட்டணி சாத்தியத்தை வலுப்படுத்துகின்றன. பிரதமர் மோடியின் தமிழ்நாடு வருகைக்குப் பிறகே தேர்தல் கூட்டணி தொடர்பான தெளிவான பதில்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கற்கண்டு ஓடை 1

கதை: இ.சு.முரளிதரன்
வரைகலை - மகேந்திரன் வினித்
திருப்பங்கள் நிறைந்த சித்திரத் தொடர்கதை




ந.பரமேஸ்வரன்

# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்



தந்தை செல்வாவும் ஜி.ஜி.யும் இணைந்து தமிழர் விடுதலைக்கூட்டணியை உருவாக்கினார்கள் என்றே சகல அரசியல்வாதிகளும், ஊடகவியலாளர்களும் பேசியும் எழுதியும் வருகின்றனர். ஆனால் தமிழர் விடுதலைக்கூட்டணி உருவாக்கப்பட்டபோது அடங்காத்தமிழன் சுந்தரலிங்கத்தையும் இணைத்தே தமிழர் விடுதலைக்கூட்டணி உருவாக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ஞானமூர்த்தியே தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கத்திற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர். வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ஞானமூர்த்தி பல தடவைகள் சுந்தரலிங்கத்தின் கீரிமலை இல்லத்திற்கு விஜயம் செய்து தமிழ்கட்சிகளின் ஒற்றுமை பற்றியும், அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றியும் எடுத்துக்கூறி சுந்தரலிங்கத்தை தமிழர் விடுதலைக்கூட்டணியில் இணைந்துகொள்வதற்குச் சம்மதிக்கச் செய்தார்.

23

சுந்தரலிங்கம் தமிழர் விடுதலைக்கூட்டணியில் இணைந்துகொள்வதற்குச் சம்மதம் தெரிவித்தகையுடன் சுந்தரலிங்கத்தையும் அழைத்துச்சென்று தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார். தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாப்பு சுந்தரலிங்கத்தாலேயே உருவாக்கப்பட்டது. தமிழரசுக்கட்சி வெள்ளிவிழா மலரில் பிரசுரமாகியுள்ள ஒளிப்படமே இதற்குச் சான்றாகக் காணப்படுகி[illegible] ஜி.ஜி.யும் சுந்தரலிங்கத்தை ஓரம்கட்டத்தொடங்கினர். இதனால் [illegible] தமிழர் விடுதலைக்கூட்டணியில் இருந்து ஒதுங்கிக்கொண்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளூராட்சி

## வேட்பாளப் பெருமக்களுக்கு...

**அவசரமா ஒரு கடுதாசி**

*வணக்கம்!*

நேற்றையதினம் ஒரு அச்சக வாசலிலை இரண்டு மூண்டு பிரதேச சபையளின்ர வேட்பாளர்மாரைச் சந்திச்சன். தெரிஞ்சவை எண்டபடியாலை அவையளோடை பலதையும் பத்தையும் கதைச்சுக்கொண்டிருந்தன். எல்லாத்தையும் வடிவாக் கதைச்சினம். விட்ட பிழை தொட்ட பிழை எண்டு எல்லாத்தையும் சொல்லச் சொல்ல 'மொண்டசொரிப்' பிள்ளையள் கேக்கிறமாதிரி தலையாட்டி எல்லாத்தையும் 'ஓம்... ஓம்..'எண்டுகேட்டினம்.

இனிமேல் செய்ய வேண்டிய வேலையள் கனக்க இருக்கு. என்.பி.பி.யும் எங்களைப் பற்றி அதிகம் சிந்திக்கிறதாத் தெரியேல்லை. அவையும் பழைய பல்லவியைப் புது இராகத்திலை சுருதியையும் மாத்திப் பாடுற மாதிரித்தான் தெரியுது. அவையள் எல்லாம் அண்ணை தம்பி மாற்றை பிள்ளையள்தானே! அவையள் முன்னம் கருப்பட்டியை கித்துள் ஓலையிலை சுத்தி வித்தினம். இப்ப வந்தவை அதை வடிவாப் பொலித்தீனிலை பைக்கற் பண்ணி சீல் வைச்சு லேபல் போட்டு விக்கினம். ஆனால் உள்ள கிடக்கிறது கித்துள்தான். அதை எங்கடை சில பேயள் ஏதோ புதுச்சாமான் செய்து விக்கினம் எண்டு பெருங்கதை. வாங்கித் திண்டு பாத்தன். அதே மணம், அதே குணம், அதே சுவை. ஒரு வித்தியாசமுமில்லை' எண்டு புத்திமதியைச் சொல்லிப்போட்டு விட்டன். இன்னும் நாங்கள் ஏமாறுற கூட்டமாத்தான் இருக்கிறமோ எண்டு மனசுக்கை யோசிச்சன்.



போட்டுவாறன் எண்டு வெளிக்கிடேக்கைதான் "சுவரொட்டிகளை அகற்ற 2000 பொலிஸார்" எண்ட செய்தி ஞாபகத்துக்கு வந்திது. என்ன தம்பிமார் எலக்சன் போஸ்ற்றர் அடிக்கவோ பிறஸுக்கு வந்தனியள்? எண்டு கேட்டன். அவை ஆளையாள் பாத்தினம். பிறகு கதைக்கத் துவங்கிச்சினம்.

'இல்லை அன்னமுத்து அண்ணை இந்தமுறை நாங்கள் போஸ்டர் அடிக்க வேணும் எண்டதை இன்னும் தீர்மானிக்கேல்லை. பெரும்பாலும் அதைக் கைவிடுவம் எண்டு யோசிக்கிறம். போன பார்லிமெண்ட் எலக்சனுக்கு அடிச்சு ஒட்டின போஸ்றருகளைப் பாத்தம். வடிவாப் பெயின்ட் அடிச்சு வைச்ச மதில்களிலை ஒட்டின போஸ்டர் இன்னும் அப்பிடியே கரி பூசினமாதிரிக் கிடக்கிறதைப் பாத்தம். மங்கின போஸ்டரிலை செத்த பிணம் மாதிரி அவையின்ரை படங்கள் இன்னும் மங்கிப்போய் கிடக்கு. பாக்க அருவருப்பாக் கிடக்கு' எண்டு அவை சொல்லிச்சினம். இந்தத் திருத்தம்தான் இப்ப எல்லாருக்கும் தேவை.

மற்றவையள் தங்கட வீடு வளவு நல்லா இருக்கவேணும், பாக்க வடிவா இருக்கவேணும் எண்டு நினைச்சுத்தானே வடிவா வெள்ளை அடிச்சு வைச்சிருக்கினம். அதைப்போலைத்தானே அவையள் மதிலையும் பராமரிக்கினம். அந்த மதிலுக்கு கோதுமை மாவைக் கரைச்சுப் பூசி அதுக்கு மேலை ஏழெட்டுப் போஸ்டர்களைக் கண்டபடி ஒட்டிக் கடைசியிலை வெல்லுறியளோ எண்டால் அதுகும் இல்லை.

போன பார்லிமெண்ட் எலக்சன் அறிவிச்ச உடனை முந்தின அமைச்சர் பல இலட்சம் செலவழிச்சுப் போஸ்டரை அடிச்சுத் தன்ரை ஏவுகணையளை வைச்சுப் பட்டி தொட்டி எல்லாம் ஒட்டு ஒட்டு எண்டு ஒட்டி, கடைசியிலை பார்லிமென்டைப் படத்திலை தான் பார்த்தவர். பார்லிமெண்ட் படிக்குக் கிட்டவும் அவராலை போக ஏலாமல் போச்சுது. ஆனபடியாலை உந்த மதிலுக்குக் கரி பூசுற விளையாட்டைக் கைவிடுங்கோ.

போஸ்டருக்கும் மட்டையளுக்கும் வீணாச் செலவழிக்காமல் போய் சனத்தைச் சந்திச்சு அவையளின்ரை மனதிலை உங்களை ஒட்டப் பாருங்கோ. அவையளிட்டைப் போய் பொய் சொல்லிக் காவடி ஒண்டும் நீங்கள் எடுக்கவேண்டாம். அவையளுக்கு நீங்கள் உண்மையாகவும் விசுவாசமாயும் இருப்பம் எண்டு சொல்லுங்கோ. உங்கடை வீட்டுவாசலுக்குக் குப்பை லொறி ஒழுங்கா வரும் எண்டும் உங்கடை வீடு இருக்கிற றோட்டிலை இருக்கிற லைற்போஸ்ட்டிலை பூட்டி இருக்கிற பல்புகள் எல்லாம் ஒழுங்கா எரியும் எண்ட உறுதியைச் சொல்லுங்கோ. தோட்டக் காணியளுக்குள்ளை வியாபார நிலையங்கள் அமைக்க அனுமதி குடுக்க மாட்டம் எண்டு ஆணித்தரமாச் சொல்லுங்கோ. சனிக்கிழமை காலமை தொடங்கி திங்கள் காலமைக்குள்ளை கட்டி முடிக்கிற கள்ளக் கட்டட வேலையளுக்கு உடந்தையா இருக்கமாட்டம் எண்டதை வெளிப்படையாச் சொல்லுங்கோ. பிள்ளையையும் நுள்ளி தொட்டிலையும் ஆட்டமாட்டம் எண்டதைத் தெளிவுபடுத்துங்கோ.

ஆக்கிறவரும் நீங்களே, அழிக்கிறவரும் நீங்களே எண்டு சிவன்ரை வேஷம் போடவேண்டாம். ஊரைப் பொறுத்தவரை நீங்கள் எல்லாரும் எங்களுக்கு ஒண்டுதான். எல்லாரும் எங்கடை ஆக்கள் எங்களுக்குத் தெரிஞ்சவங்கள்தான். ஒருத்தரும் புதுசா வானத்திலை இருந்து வந்து விழுகிறதில்லை. உங்களிலை பல பேரைப் பிறந்த அண்டு தொட்டு எங்களுக்குத் தெரியும். நீங்கள் என்ன செய்தனீங்கள், எந்தப் பள்ளிக்கூடத்திலை படிச்சனீங்கள் என்னென்ன திருகுதாளம் செய்தனீங்கள் எண்டு வடிவாத்தெரியும். அதாலை எங்களுக்கு நீங்கள் புலுமாசு விடேலாது. இந்தமுறை நல்லவைக்கு வாக்களிப்பம் எண்டு நாங்கள் உறுதி தாறம். எங்களை நம்புங்கோ.

ஆனபடியாலை மக்கள் சேவையாளராக இருந்து மக்கள் சேவையைத் திறம்படச் செய்யிற வழியைப் பாருங்கோ.

இப்படிக்கு,

அப்பாவி அன்னமுத்து

# ஊர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

போனகிழமைக்கு முந்தின கிழமை ஊர்ப்புதினத்தில ராகுல சாங்கிருத்தியனின் "வால்காவில் இருந்து கங்கை வரை" வாசிக்கிறது தொடர்பாகக் கதைக்கேக்குள்ளை அதைத் தேடிப்போய் வாசிச்சால் ஒரு கிழமைக்குள்ளை வாசிச்சவர் வீட்டில ஒரு துக்ககாரியம் நடக்கும் எண்டொராள் சொன்னதாகக் குறிப்பிட்டிருந்தனான். நானும் அதைத் தேடிப்போய்த்தான் வாசிச்சனான். என்ர வீட்டில அப்பிடியொரு துக்ககாரியமும் நடக்கேல்ல. அதால நீங்களும் அந்தப் புத்தகத்தை இதுவரைக்கும் வாசிக்காட்டில் இனிமேல் பயப்பிடாமல் தேடிப்போய் வாசிக்கலாம். ம்.... இப்ப நாங்கள் விசயத்திற்கு வருவம்.

புனிதவதி ரீச்சரை ஊர்க்காரர் "அம்பாள் அக்கா" எண்டு செல்லமாகக் கூப்பிடுவினம். அவாவின்ர தோற்றப்பொலிவும் அப்பிடித்தானிருக்கும். நான் சண்முகனைத் தவறாமல் சந்திக்கப்போற நாள்களில எனக்கு வாய்க்கிதமாய் நீராகாரம் தந்து உபசரிக்கிறதெல்லாம் ரீச்சர்தான். அவ மலேசியாவில பிறந்துதான் பிறகு இஞ்சை வந்தவா. சண்முகன் இருந்தவரைக்கும் அவரின்ர நிழல் ரீச்சர்தான். சண்முகனோட நான் இருந்து கதைக்கேக்குள்ள வீட்டில அவசரமான வேலையொண்டும் இல்லாட்டி அவவும் எங்களோட இருந்து கதைப்பா. "நீங்கள் பெரியாக்கள் உங்கள் அளவுக்கு எனக்கு ஆற்றலில்லை எண்டாலும் என்ர கருத்தையும் சொல்லுறன்" எண்டுதான் கதைக்கத்தொடங்குவா. நான் அவவை ரீச்சர் எண்டுதான் அழைப்பன். ஆனால் அவாவே 'ரீச்சர்' எண்டு ஒராளைக் குறிப்பிடுவா. அது எழுத்தாளர் குந்தவையை மட்டும்தான் குறிக்கும். புனிதவதி ரீச்சரும் குந்தவையும் நெடுங்காலமாக உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில ஒண்டாகப் படிப்பிச்சவை. குந்தவை கதைக்கிறது புனிதவதி ரீச்சருக்குத்தான் அச்சொட்டா விளங்கும். அதால அவ தன்னைக் குந்தவையின்ர "ட்ரான்ஸிலேற்றர்" எண்டும் சொல்லுவா. குந்தவை எனக்கு நல்ல நெருக்கமானதும் இந்த வழியிலதான்.

24

சண்முகன் ஓர் எழுத்தாளன் என்ற வகையில்தான் நான் அவரைச் சந்திக்கப்போனேன். ஆனால் அதையும் கடந்த ஒரு நல்ல சினேகிதமா அது மாறியது. சண்முகனும் புனிதவதி ரீச்சரும் என்னை ஒரு மகன் போல கருதி அன்பு செலுத்தினர். நான் சண்முகனோடு கதைத்துவிட்டு விடைபெறும்போது ரீச்சர் ஏதாவதொரு சாமானை பையில போட்டுத்தருவா. சிலவேளை பாக்கு வெத்திலை, சிலவேளை தோடம்பழம், பப்பாசிப்பழம், வாழைப்பழம், மாம்பழம், பிலாப்பழம் எண்டு ஏதாவதொரு பழவகை அந்தப் பைக்குள்ள இருக்கும். அதுகும் பிலாப்பழ சீசன் எண்டால் குப்பிழானில இருந்து சண்முகன் வீட்டுக்கும் பிலாப்பழங்கள் வந்து குவியும். சண்முகன் ஒவ்வொரு பிலாப்பழத்திற்கும் பெயர் வச்சிருப்பார். "இது முத்தத்தான்" எண்டொரு பிலாப்பழத்தை எடுத்துக்காட்டுவார். அது அவரின்ர குப்பிழான் வீட்டு முற்றதில நிக்கிற பிலாமரத்தின்ர பழம் எண்டு விளக்கமளிப்பார். "இது கூழன், இது செண்பக விரியன், இது சிவப்பி" எண்டு ஒவ்வொரு பிலாப்பழத்திற்கும் ஒவ்வொரு பெயர் சொல்லுவார். பெயருக்கேற்றமாதிரி ஒவ்வொரு பழத்தின்ர சுவையும் தனித்துவமாத்தான் இருக்கும். இதைப் போல சண்முகன் நிறைய எனக்குச் சொல்லியிருக்கிறார். அதெல்லாம் எனக்கு ஒரு நல்ல அனுபவமாயிருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ந.பரமேஸ்வரன்

# வீதித்திறப்பும் பீதிக்கூச்சல்களும்!

வசாவிளானிலிருந்து பலாலி வரையான பலாலி யாழ்ப்பாணம் வீதி கடந்த வியாழக்கிழமை பொதுமக்களின் பாவனைக்கு கட்டுப்பாடுகளுடன் திறந்துவிடப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதியுடன் தமிழர்களின் ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. 2009 மே 18 ஆம் திகதிக்குப் பின்னர் ஸ்ரீலங்காவில் ஜனாதிபதியாகப் பதவி வகித்த நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதிகள் எவரும் இதுவரை கண்டுகொள்ளாத ஒரு விடயத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க செயல்வடிவம் கொடுத்துள்ளார். எவருமே கனவில்கூட நினைத்துப்பார்த்திராத ஒரு விடயத்தை திடீரென தேசிய மக்கள் சக்தியினர் அமுல்ப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைக்கு எதிராக விமல் வீரவன்ஸ, ராஜபக்ச அணியினர், சரத் வீரசேகர போன்றோர் நிச்சயம் வீதிக்கு இறங்குவார்கள். 'ஐயோ எமது வீரர்களின் தியாகத்தை தேசிய மக்கள் சக்தி கொச்சைப்படுத்திவிட்டது. புலி வரப்போகின்றது; என்றெல்லாம் ஊளையிடுவார்கள். இவர்களின் கூக்குரலைப்பற்றி தேசிய மக்கள் சக்தி கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இந்தப் பாதை திறப்புக்கு எதிராக தெற்கில் எதிர்ப்பலை உருவாகும் என சிந்தித்திருந்தால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினரும் பாதையைத் திறந்திருக்கமாட்டார்கள்.

மஹிந்த ராஜபக்ச நினைத்திருந்தால் 2009 ஆம் ஆண்டு மே 20 ஆம் திகதியே பாதுகாப்பு வலயங்களை அகற்றியிருக்கமுடியும். ஆனால் மஹிந்தவிடமிருந்த தமிழர்களை ஏதிலிகளாக்கும் மனோபாவம் அதற்கு இடமளிக்கவில்லை. தனது சுயகௌரவத்தை கைவிட்டு (வீணையைக் கைவிட்டு) வெற்றிலையுடன் இணைந்த டக்ளஸ் தேவானந்தாவால்கூட படையினர் கையகப்படுத்தியிருந்த நிலங்களை விடுவிக்க முடியவில்லை.

வவுனியாவில் வைத்து ஜனாதிபதி மைத்திரியை ஒருமையில் விளித்து "எங்கடை உப்பைத்தின்ற நீ .." என உரையாற்றி நல்லாட்சிக்காலத்தில் ரணிலுக்கு நுங்கு கொடுத்து தேன் நிலவு கொண்டாடிய சட்டமேதை சுமந்திரனால்கூட படையினர் கையகப்படுத்தியிருந்த நிலங்களை விடுவிக்க முடியவில்லை. இலங்கைத்தீவிலிருந்து தமிழர்களை ஒழிப்பதையே நோக்கமாகக்கொண்டு 'நான் பதவிக்கு வந்தால் 24 மணித்தியாலத்தில் தனிச்சிங்களச்சட்டத்தை அமுல்படுத்துவேன் 'என்ற கோஷத்துடன் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ பண்டாரநாயக்கவால் ஆரம்பிக்கப்பட்ட கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் போட்டியிட்டு யாழ்ப்பாண இளைஞர்களின் தன்மானத்தை, வேலைவாய்ப்பு என்ற போர்வையில் அடகுவைத்து இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக யாழ்ப்பாணத்திலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் இராமநாதனால்கூட தனது சொந்தக் கிராமத்தில் சுயமாக நடமாடமுடியாமல் போய்விட்டது. இப்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பாதையைத் திறந்துவிட்டதும் மாலை ஆறு மணி முதல் காலை ஐந்து மணி வரை எந்தச்சட்டத்தின் கீழ் பாதையை மூடுகிறீர்கள் என தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் பார்த்து கேள்வி எழுப்பியுள்ளார் சட்டமேதை சுமந்திரன் .

ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழரசுக்கட்சியின் 'நிறைவேற்று அதிகாரம் மிக்க' பதில் செயலாளரான சுமந்திரன் யாழ்ப்பாண மக்களின் மீது கொண்டுள்ள பாசத்திற்கு அளவே இல்லை. . யாழ்ப்பாண மக்கள் அவரை நிராகரித்த போதும் யாழ்ப்பாண மக்களுக்காக குரல்கொடுப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். 'பலாலிக்கு வந்தாயா? பலாலியில் உள்ள தோட்டங்களில் நாற்று நட்டாயா? அங்கு களை பறிக்கும் எம் குலப்பெண்களுக்கு 'பிளேன்ரீ ' கொண்டுவந்து கொடுத்தாயா? என்ன துணிவு இருந்தால் 6.00 மணியுடன் பாதையைப் பூட்டுவாய் ?'என்று கேட்பதெல்லாம் , கையாலாகத்தனத்தின் வெளிப்பாடேயன்றி வேறில்லை.

**செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள பிரேரணையைச் சமாளிக்கும் நோக்கிலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலை மனதில் கொண்டும்தான் பாதை திறக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதற்காகவாது இப்படி நன்மைகள் கிடைத்தால், அதை வரவேற்கத்தானே வேண்டும்.**

செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள பிரேரணையைச் சமாளிக்கும் நோக்கிலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலை மனதில் கொண்டும்தான் பாதை திறக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதற்காகவாவது இப்படி நன்மைகள் கிடைத்தால், அதை வரவேற்கத்தானே வேண்டும்.

வசாவிளானிலிருந்து பலாலி வரையான பலாலி யாழ்ப்பாணம் வீதியைத் திறந்துவிட்டதுபோல் முல்லைத்தீவில் எஞ்சிய பகுதிகளையும், வீதிகளையும் விடுவித்தால் தேசிய மக்கள் சக்தி , தமிழர் பகுதிகளிலும் பலமாக வேரூன்றும் வாய்ப்புகள் அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
13 ஏப்ரல் 2025



● ஆர்.பிரகாஷ்

# பல்லாயிரம் வருடங்களின் பின் டையர் ஓநாய்களின் ஊளை!

சுமார் 12 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்பே பூமியில் இருந்து அழிந்து போன ஓநாய் இனத்துக்கு விஞ்ஞானிகள் உயிர்கொடுத்துள்ளனர். உலகில் பிரமிப்பூட்டும் அறிவியல் புரட்சியாக இந்த நிகழ்வு அமைந்திருக்கின்றது. பல்லாயிரம் வருடங்களுக்கு முன் அழிந்துபோன டையர் ஓநாய் இனத்தின் ஊளையிடுதலை மீண்டும் கண்முன் கொண்டுவந்தமை எவ்வாறு சாத்தியமானது?

'கோலஸ்ஸால் பயோ சயன்சஸ்' என்ற நிறுவனம்தான் இந்தச் சாதனையைப் புடைத்துள்ளது. உலகில் அழிந்துபோன உயிரினம் ஒன்று மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். இதன் மூலம் ஏனைய அழிந்துபோன உயிரினங்களையும்கூட நாம் மீண்டும் பூமிக்குக் கொண்டுவரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அறிவியல் துறையில் இது மிக முக்கியமான ஆய்வாகக் கருதப்படுகிறது.

## எப்படிச் சாத்தியம்?

இதற்காக விஞ்ஞானிகள் குழு அழிந்துபோன டையர் ஓநாய் புதைபடிவங்களிலிருந்து மரபணுவைப் பிரித்தெடுத்துள்ளனர். அமெரிக்காவின் ஓஹியோவிலிருந்து எடுக்கப்பட்ட 13 ஆயிரம் ஆண்டுகள் பழமையான டையர் ஓநாயின் பல் மற்றும் இடாஹோவிலிருந்து எடுக்கப்பட்ட 72 ஆயிரம் ஆண்டுகள் பழமையான டையர் ஓநாயின் மண்டை ஓட்டில் இருந்து மரபணுவை விஞ்ஞானிகள் பிரித்து எடுத்துள்ளனர். இத்தனை ஆண்டுகள் ஆனாலும்கூட இந்த மரபணு சிதையாமல் பத்திரமாக இருந்துள்ளது. இதனால் குறித்த மரபணுவை அடிப்படையாக வைத்து விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வுகளை ஆரம்பித்தனர்.

ஆய்வின்போது, டையர் ஓநாய்கள் தங்கள் மரபணுவில் 99.5 வீதம் சாம்பல் ஓநாய்களுடன் பகிர்ந்துகொண்டது தெரியவந்தது. இருப்பினும், 5.7 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே அது பரிணாம ரீதியாக வேறுபட்டுவிட்டதும் கண்டறியப்பட்டது.

பிறகு டையர் ஓநாய் மரபணுவை, சாம்பல் நிற ஓநாய்களுடன் ஒப்பிடுவதன் மூலம் அதன் அளவு, தசை அமைப்பு மற்றும் வெள்ளை நிறத் தோல் என அதன் தனித்துவங்களை ஆய்வாளர்கள் உறுதிசெய்தனர். 14 மரபணுக்களில் 20 முக்கியமான மரபணு மாறுபாடுகளை அடையாளம் கண்டனர்.

ஓநாயின் இரத்தத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 'எண்டோடெலியல்' செல்களைப் பயன்படுத்தி குளோனிங் செய்துள்ளனர். இந்த செல்கள் டையர் ஓநாய் வகைகளுக்கு ஏற்ப திருத்தம் செய்யப்பட்டு, அணுக்கரு நீக்கப்பட்ட சாம்பல் ஓநாய் முட்டைகளில் பொருத்தப்பட்டன. பின்னர் அந்தக் கருக்கள் நாய்களுக்கு மாற்றப்பட்டன. அந்த நாய்தான் இப்போது மூன்று ஆரோக்கியமான டையர் ஓநாய் குட்டிகளான ரோமுலஸ், ரெமுஸ் மற்றும் கலீசி ஆகியவற்றை ஈன்றுள்ளது. இது வெறும் தொடக்கம்தான் என்றும் வரும் காலத்தில் மேலும் பல விலங்குகளுக்கு இதுபோல உயிர்கொடுக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.




## தொடரும் ஆய்வுகள்

தற்போது உலகில் இருந்து அழிந்துபோன டொடோ இனப் பறவையையும், டாஸ்மேனியப் புலிகளையும் மீண்டும் கொண்டுவருவதற்கு ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. டையர் ஓநாய்களுக்குப் பயன்படுத்தப்பட்ட அதே நடைமுறைகளே இதில் பயன்படுத்தப்படவுள்ளன. இந்த ஆய்வுகள் உலகையே ஈர்த்துள்ள நிலையில், மமூத் யானைகளையும் மீண்டும் உயிர்ப்பிக்கவேண்டும் என்ற கோரிக்கையை எலான் மஸ்க் விடுத்துள்ளார்.

உலகில் இருந்து அழிந்த உயிரினங்களை மீண்டும் உயிருடன் கொண்டுவரும் முயற்சி எவ்வளவுக்கு எவ்வளவு ஆச்சரியம் மிக்கதோ அவ்வளவுக்கு ஆபத்தும் மிக்கது என்று இன்னொரு தரப்பு விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஆதி ஆபத்தான விலங்குகள் இதன்மூலம் தோற்றம் பெறலாம் என்ற எச்சரிக்கையை அவர்கள் விடுத்துள்ளனர். ஆய்வுகள் இவ்வாறு தொடர்ந்தால் டைனோசர்களின் வருகை தொலைவில் இல்லை என்பதே அவர்களின் கருத்து.



# போரின்

கவிதை

7

போரின் நெருப்பு, பற்றி எரிந்து..சூழ்ந்து...
தகித்தவர்மீது...தாவிப்படர்ந்து...உயிர்களின் ஈரம் உறிஞ்ச..
கூரையில்லா..கூடாரங்களுக்குள் ..குழந்தைகள் கதற..
பசியின் தகிப்பும் போரின் தணலும் ஒன்றாய் சேர..
வதைத்து வதைத்து..மனம் கசக்கி....அழிக்க...
செத்துக்கிடக்கும் தாயின் முலைபார்க்கும்..பிஞ்சு...
வானம் இடிந்து மார்பில் விழுவதாய்..மரண ஓசைகள்.
கால்கள் வெட்டி ..கைகள் துளைத்து...கருவிகள் பாயும்..
கத்தும்.. கதறும் மனித உடல்கள்...
யாரை யார் எடுக்க..?
ஒன்றாய்..பிரித்தறிய இயலாப் பிணங்கள்...மனங்கள்
பால் குடித்த சிசுவின் பிஞ்சுக்கால் ஒன்றை..
குண்டுமழை குதறிக்கடித்தது.....
தாயின் பிணம் சூடடங்காமல்..விழிபிளந்து கிடக்க..
இறந்தும் பால்கொடுத்த இத்தாயின்..பிள்ளை முலைபார்த்துக்கத்த....
இதைவிடவும்..கொடுமை உண்டோ...இவ்வுலகில்?
கத்திக்கத்தியே செத்துவிடும் வலியில்
பிஞ்சின் குரல் குழறி மயங்கியது...
யார் எடுத்தார்...யார் கொடுத்தார்..வாழ்வு..?
எதுவும் தெரியவில்லை....
பதிறாது வருடங்கள் கடந்துபோயின
ஒற்றைக்கால் 'மந்தாகினியாக' மேடைகளில்...
நடனம் புரிகிறாள்...
இரு கால்களால்.. கடக்க முடியாத பல தூரங்களை
ஒற்றைக்கால்களால் ஓடிக்கடந்தாள்.
பொய்கள் பேசும்...உலகில் அவள்
பொய்க்கால்கள் பல உண்மைகளை உலகுக்கு உரைத்தன...
நடக்கமுடியாத கால்களால் ஓடிப்பழகினாள்.
நிற்கமுடியாத கால்களால் ஆடிப்பழகினாள்.
தினந்தினம் உருமாறும் உலகில்
உண்மையான நன்மைகளோடு
போராடிப்பழகினாள்...
வாழ்வின் நிலைப்புக்காய் தொழில் செய்தாள்..
செய்யும் தொழில் தெய்வம் என்றாள்..
வேகம்...ஓயவில்லை வறுமைக்கு வருந்தவிலை
போரின் குண்டுகள் துண்டித்துப்போட்ட, அவள்..
காலில்லா மயிலொன்று...போரில் பிறந்த வாழ்வொன்று..
இது காலம் கணக்கெழுதும்..போரின் எச்சம்..
கால் ஒன்றை வெட்டி வேடிக்கை பார்த்தது காலம்...
ஒரு கால் போதுமென்று எழுந்து நடந்தாள்..
உயிர் சிதறும் வலியுடனே...சாதித்தவள்...
ஒரு பிணமேட்டின்...வாசத்தில் பிறந்து ...வாழ்ந்தவள்...
காலம் கொடுத்த காயங்களைக்கொண்டு கரைசேர்ந்தவள்...
அவள் வேகம் அசுர வேகம்... எதற்கும் ஓயாது...
பாவம் செய்தவர்கள்...இவளைப் பார்க்கட்டும் என்று...
காலம் இவளை வாழவைத்திருக்கிறது...
எங்கள் தேசத்தின்... ஒரு கவிதை..
காலம் காவு கொண்ட வாழ்வை....ஒழுங்கமைத்திருக்கிறது..
கடின வெளியில் தவழ்ந்து வந்திருக்கிறது.....
எழுந்து நிற்கின்றன சபைகள்.....ஆரவாரிக்கும்...மேடைமுழுதும்...
வெற்றிபெற்றிருக்கிறது......
இது ...வியப்பின் விந்தை....இரண்டு கால்களோடு
வாழ்வை அவமதிக்கும்...இளைஞர்களுக்கு
இவள் ஒரு பாடம்...வாழ்வில் வலிகளோடு போராடும்
இவள் ...எம் இன வரலாற்றின் ஒரு பாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யே.அமல றஜீவ்
தமிழ் சிறப்புக்கற்கை மாணவன்,
கிழக்குப்பல்கலைக்கழகம்.

# வாடைக்காற்றின் மறுபக்கம்

சஞ்சீவி சிறுகதை



அம்மா அத்தான் போன் பண்ணினார். "கூளர் விடியவே குறிகாட்டுவான் வந்திற்றாம், றோளர் றாலும் வந்திற்றாம் ஐஸ் இல்லையாம், கொண்டுபோகனும் குய்க்கா வரட்டாம் நான் போறன்" என்றுவிட்டு, ரெண்டுபிடி புட்டை அவசர அவசரமாக வாயில் போட்டுக்கொண்டு தன் லுமாலா வார்ச் சைக்கிளை வேகமாக மிதிக்கிறான். மெஜன் மெயின் றோட்டில் இருந்து கொம்பனிச் சந்திக்குத் திரும்பும் சந்தர்ப்பத்தில், றாயு தான் வேலைசெய்யும் கடையிலிருந்து வெளியே ஓடிவந்து "டேய் மெஜன் இங்க வந்துட்டுப் போடா" எனக்கூப்பிட மெஜன் பதிலாக, "டேய் ஒரு மணித்தியாலத்தில வந்திடுவன், போட்ல சாமான் ஏத்தியாச்சாம் நான் போறதும் வாறதும்தான், வந்து பேசுறன்" என்று கூறிக்கொண்டே கொம்பனி ஒழுங்கைக்குள் நுழைகிறான். கொம்பனிக் கடற்கரையை அடைந்ததும், ரெண்டு பெட்டி கிளி மீனும், மூன்று கூள் பொக்ஸ் றாழும் ஏத்தியாச்சு, மண்ணெண்ணையும் விட்டாச்சு, பெருநண்டு ஏத்தினா சரி என்று கூறிக்கொண்டே போட்டிலிருந்து துசி வருகிறான். ஆ சரிடா அண்ணாச்சி, அப்பா வந்தவரா எனக்கேட்டுக் கொண்டே மெஜனும் கொம்பனிக்குள் நுழைய, "அப்பா மாவலி அடிக்கு றோளர் கொண்டுபோகப் போயிற்றார்" என்று கூறிக் கொண்டே ரான்ஸ்போர்ட்டுக்கான 150 ரூபாயை நீட்டுகிறாள் அமலி. என்ர காசையும் மெஜனட்டயே குடு நான் குறிகாட்டுவானில வைச்சு வேண்டுறேன் என்று கூறிக்கொண்டே கையில் பெருநண்டுக் கூடையுடனும் றமேஸ் போட்டை நோக்கி நடக்கிறான். அவனுடன் நடந்துகொண்டே மெஜனும் "என்ன றமேஸ் அண்ணா காத்தும் அடங்கீற்று, உவட்டும் இல்ல, கடலும் சீராக்கிடக்கு இண்டைக்குச் சன்னம் பறக்கும் 40 கோஸ்" என்று கூறிக்கொண்டு போட்டைத் தள்ள, றமேஸ் அவனைப் பார்த்து கச்சானால இருட்டிக் கிடக்கு பெரிய காத்தொண்டு வரப்போகுது குய்க்கா போய்ற்றுவருவோம்டா என்று கூறிப் புறப்படுகிறார்கள். எதற்கும் தயங்காத 20 வயது தொட்ட மெஜன் 40 கோஸ் எஞ்சினை ஸ்டார்ட் பண்ணி ஓட பச்சை டொல்பின் போட் வேகம் எடுக்க ஆரம்பிக்கிறது.

மெஜனின் தந்தையான றஞ்சனும் நெடுந்தீவு மாவலி துறையில் நிண்டு கொம்பனி போட்டு அதிவேகத்தில் சிற்றலைகளை மிதித்து ஓடுவதைக் கண்டு கொண்டே றோளரை ஸ்டார்ட் பண்ணுவதற்கான ஆயத்தம் செய்கிறார். றஞ்சனுடன் றோளரில் செல்கின்ற காந்தன் அவரிடம் "மெஜனுக்கு நீங்க எல்லாம் பழக்கினது நல்லதாப் போச்சு" என்றான். ஏனெண்டு றஞ்சன் கேட்க, நீங்க மாறி மற்ற வேலையள் செய்யும்போது உங்கட வேலை எல்லாம் அவன் பார்க்கிறான்" என்றான் காந்தன். காந்தனை நோக்கி சலித்த முகத்துடன் "மூண்டு பெட்டயளுக்கு அவன் ஒருத்தன்தானே பொடியன் அதனால பயம், என்னவும் நடந்திருமோ எண்டு அவன்ர தாய்க்காறியும் அவன் மாறி போட்டுக்கு போறேண்டா எனக்குத்தான் பேசுவாள். என்ன செய்யுறது இருந்த நண்டு வலையழும் முழுசாக் களவு போச்சு, அதனால இந்த மீன் கொம்பனியையே நம்பி இருக்கவேண்டி இருக்கு" என்றான் றஞ்சன்.

காந்தன் றஞ்சனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே அவன் இப்ப உங்களவிட நல்லா போட் ஓடுறான் றஞ்சண்ண என்றான், ரஞ்சன் மறுமொழியாக "ஆனாலும் அனுபவம் இல்லத்தானேடா அதான் பயம்" என்று கூறிக்கொண்டிருக்கையில் வடக்கு மேற்கு வானில் கருமேகங்கள் கூடி காற்றும் மழையும் வருவதை றஞ்சன் உற்றுநோக்குகிறான். காந்தனைப் பார்த்து "கச்சானால இருட்டிக்கொண்டு, காத்தும் மழையும் வருது, இப்ப போகத்தேவேல்ல. மழையும் காத்தும் தாண்டினதும் போவோம்" என்று கூறி மழையில் நனையாமல் இருக்க றோளருக்குள் நுழையச் செல்கின்றனர். இது நடந்து கொண்டிருந்த அதேசமயத்தில் மெஜனின் போட்டும் குறிகாட்டுவானைச் சேர்கிறது. குறிகட்டுவானைச் சேர்ந்ததும் மெஜன் றமேஸைப் பார்த்து, "எப்படி அண்ணா இண்டைக்கு ஓட்டம் 23 நிமிசத்தில குறிகாட்டுவான் வந்திற்றம்" என்று கூறி போட்டை மண்ணில் முட்டவிட்டு ஏத்தி, மீன் பெட்டிகளையும் றால் பெட்டிகளையும் இறக்குகிறார்கள்.

றமேஸ் மேஜனைப் பார்த்து "காத்தும் மழையும் வருகுதடா, நிண்டு காத்தும் மழையும் கழியப்போவோம்" என்கிறான். மெஜன், "இல்ல றமேஸ் அண்ணா வெளிக்கிட்டம்னா இப்ப போயிரலாம்" என்று சொல்லிக்கொண்டே வேகமாக இரண்டு ஐஸ் பெட்டிகளையும் பத்து வெறுமையான கூல் பொக்ஸ்களையும் ஏற்றுகிறான். றமேசுக்கு இரண்டு மனமாக இருக்கிறது. ஆனாலும் கூளர் வாகன ஓட்டிக்குக் கைகளைக் காட்டிவிட்டு இருவரும் புறப்படுகின்றனர். பத்து நிமிடத்துக்குள்ளேயே போட் கண் பார்வையிலிருந்து மறைந்து நெடுந்தீவை நோக்கிப் பறந்துசெல்கிறது. அதே வினாடியில் அதைவிட அதிக வேகத்தில் கருமேகத்தின் இருளத்துடன் கூடிய கடும் காற்றும் மழையும் போட்டைத் துரத்திப் பிடித்து சுழல்கிறது. சுத்தி இருந்த தீவுகள் அந்தப் பதினொரு மணி நண்பகலிலே அடையாளம் தெரியாமல் மறைக்கின்றன. திசைகள் தெரியாத கடும் புயலுக்குள் போட் சிக்கிக்கொள்கின்றது. வழமையைவிட ஒரு தைரிய உணர்வு, கனமழையும் கடும் காற்றும் உடம்பில் பட விசித்திரமான தைரியம் வருகிறது. என்ன செய்துவிடும் இந்தக் காற்று மிஞ்சிப்போனா போட்ட பிரட்டும் அவ்வளவுதான் என்று என்ஜின் கவுணரை முறுக்கிப்பிடித்து கவுணர் இறுக்கியை இன்னும் இறுக்குகிறான். ஏனென்றால் இந்தக் கவுணரின் இறுக்கியை இறுக்கினால் எஞ்சின் தானாகவும் நிற்காது. அதன் வேகமும் குறையாது. மீண்டும் அதை இழக்கினால்தான் என்ஜினை நிறுத்தலாம். இது ஒரு இளரெத்தத் துடிப்புக் காரணமாக செய்த தைரியச் செயற்பாடு, இவ்வாறு செய்துகொண்டிருக்க காற்றின் சுழற்சி வேகம் அதிகரிக்கிறது, அலைகளும் அதிகரிக்கின்றன. நான்கு பக்கமும் புயல் காற்றின் காரணமாக எழுந்த அலைகளின் தாக்கத்தில் இருவரும் போட்டில் இருந்து தூக்கி எறியப்படுகின்றனர். ஆனால் போட்டு தானாகவே ஓட ஆரம்பிக்கிறது. ஓட்டுநர் இல்லாத எஞ்சின் தானாகவே ஒரு பக்கம் திரும்ப, போட் வட்டமாகச் சுற்றி ஓடுகிறது. தண்ணீருக்குள் மூழ்கி எழுந்து நீந்திக்கொண்டே தலையைத் தூக்கிப் பார்க்கிறான். றமேஸ் அண்ணாவைக் காணவில்லை, "றமேஸ் அண்ணா" என உரக்கக் கூப்பிடுகிறான், ஆள் இல்லை.... தன்னை நம்பி ஒப்படைக்கப்பட்ட போட் தனக்கு முன்னாலே சுற்றிச்சுழன்று வட்டமாக ஓடுகிறது, என்ன செய்வது என்று தெரியாமல் அங்கலாய்க்கிறான். எப்படி அதை எட்டிப்பிடிப்பது... அலையும் அதிகமாக எழுகிறது. அது சாத்தியமற்றது எனப்புரிகிறது. ஏனெனில் போட் சுழன்று ஓடும் வேகத்தில், அதுவும், அலைகளுக்குள் எட்டிப்பிடிப்பது என்பது நூற்றுக்கு ஒரு வீதமே சாத்தியமாகும். அவ்வாறு பிடிக்கும் அந்தப் பிடி தவறினால் போட்டும் தனக்கு மேல் ஏறும், என்ஜினின் விசிறியும் வெட்டும் எனப்புரிகிறது. ஆனாலும் இளரத்தம் அல்லவா சற்றும் யோசிக்காமல் அந்த ஒரு வீத முயற்சியை எடுத்துப் பார்க்கிறது. பிடி தவறுகிறது தோள்ப்பகுதியையும் கன்னத்தையும் கீறிக்கிழிக்கிறது என்ஜினின் விசிறி. அடியும் பலமாக விழுகிறது. வேணாம் நம்ம கரையை நோக்கி நீந்துவம் என எண்ணித் தலையை தூக்கிப்பார்க்கிறான். மிகத் தூரத்தில் நெடுந்தீவும் அதைவிட கிட்டத்தில் நையினாதீவும் தெரிகிறது. ஒருபக்கம் பயமும் தன்னுடன் வந்தவரைக் காணவில்லை என்ற தடுமாற்ற எண்ணமும் மேலிடுகிறது. சரி முதல்ல கரைக்குப்போவம் என தன் இறுக்கமான காற்சட்டையைக் கழட்டிவிட்டு, உள்ளாடையுடன் நீந்த ஆரம்பிக்கிறான்.

ஏறக்குறைய கால் மணி நேரத்தின் பின் காற்று மட்டும் குறைய மாவிலித் துறைமுகத்தில் இருந்து றஞ்சன் புறப்படுகிறான். தந்தைக்குத் தெரியுமா தனையனின் இப்பரிதாப நிலை, எதுவும் அறியாதவனாய் நிறைந்த மழைத்துளிகள் முகத்தில் விழ, சற்றும் தென்படாத எதிர்க்கரையான குறிகாட்டுவான் நோக்கி மெல்ல மெல்ல றோலரை நகர்த்துகிறான்.

இரத்தக்கசிவும் உடல் எரிவும் ஒருபக்கம் உடலை வருத்த, அதைப்பொருட்படுத்தாமல் 30 நிமிடங்களுக்கு மேல் நீந்துகிறான் தனையன். தொடர்ந்து இரத்தம் கசிந்துகொண்டே இருந்தபடியால் இளமனம் சோர்வடைகிறது. யாராவது தன்னைக் காணமாட்டார்களா, காப்பாற்றமாட்டார்களா என்ற எண்ணம் தோன்றுகிறது. தூரத்தில் தன் தந்தையின் நீல நிறக்கோடு போட்ட றோலர் வருவது தெரிந்தது. தன் தந்தை தன்னைப் பார்ப்பாரா... பாக்கணும் என்று தெய்வத்தை வேண்டுகிறான். கனத்த எதிர் மழைத்துளியின் தாக்குதலால் தந்தை றஞ்சன் காணவே இல்லை. சோர்ந்துபோன மனம் நீந்தமுடியாமல் தைரியம் இழந்து மூழ்க ஆரம்பிக்கிறது. மூச்சு எடுக்கமுடியாமல் மூச்சுத்திணற மனம் மட்டும் பேச ஆரம்பிக்கிறது. அப்பாக்கு நான் மட்டும்தானே உதவி, இனி யாரு அவரோட உதவிக்கு நிப்பார். தன்னுடைய அக்காக்களுக்காக தான்பட்ட கடன்களையெல்லாம் யார் சுமப்பார் இவ்வாறு தன் குடும்பத்தின் அவலநிலையை எண்ணிக்கொண்டே அந்தப் பொறுப்புவாய்ந்த இளம் இதயத்தின் துடிப்பு கடல்நீரோடு நீராகிறது. இவ்வளவு காலமும் வாரித்தந்த கடலுக்கு நன்றி கூறும் முகமாக, கடலடி மண்ணை முத்தமிடுகிறது அந்த உயிரற்ற உடலம். வறண்டு கிடக்கும் நெய்தல் நிலத்துக்கு மழையையும், துவண்டு கிடக்கும் மீனவர்களுக்கு கடல் வளங்களையும் அள்ளித்தரும் ஒரு பக்கத்தை மட்டும் பார்த்தவர்களுக்குத் தெரியவில்லை, வாடைக் காற்றின் மறுபக்கம். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிமை

சிங்கமும் கழுதைப்புலியும் பசுவைப் பிடித்து வைத்திருந் தன.


ஒரு நாள் சிங்கம் பசுவைக் கொன்றது. கழுதைப்புலி தன் குட்டியை சிங்கத்திடம்
அனுப்பி தன் பங்கைக் கேட்டது.
கழுதைப்புலியின் பங்காக பசுவின் குடலை மட்டும் கொடுத்து அனுப்பியது சிங்கம்.
கழுதைப்புலியோ "நீ ஏன் குடலைக் கொண்டு வந்தாய்? அரைவாசிப் பங்குதானே நமக்கு உரியது?" என்று கேட் டது.
குட்டி கழுதைப்புலி சொல்லியது "நான் சின்னப்பயல். பெரியவர்கள் கொடுப்பதைத்தான் கொண்டு வரமுடியும். நான் எப்படி சிங்கத்தோடு விவாதிக்க முடியும்" அதைக்கேட்ட கோபமான கழுதைப்புலி அந்தக் குடலோடு சிங்கத்தைப் பார்க்கப்போனது.
சிங்கம் உணவை உண்டு குகைக்குள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. கழுதைப்புலி வந்ததைக் கண்டு கண்களை அச்சமூட்டும் வகையில் வைத்திருந்தது.
ஏன் இங்கே வந்தாய்?"
கர்ஜித்தபடி சிங்கம் கேட்டது. பசுவில் பாதி கேட்க வந்த கழுதைப்புலி தற்போது தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு பேசியது: "ராஜ சிங்கமே ! நீங்கள் குடல் அனுப்பியதற்கு மிக்க நன்றி. ஆனால் அதனை உங்களிடமே சேர்க்க முடிவு செய்து
விட்டோம்."
குடலை சிங்கத்திடம் கொடுத்துவிட்டுத் திரும்பிய கழுதைப் புலியிடம் குட்டி கேட்டது. பசுவில் பாதி கேட்கப்போன நீங்கள் குடலையும் கொடுத்துவிட்டு வருகிறீர்களே? " என்றது.
அதற்கு "மகனே... சிங்கம் மிகக் கொடூரமாக இருந்தது. அதைக்கண்டு நடுங்கி விட்டேன். எனவே எனது பங்கையும் கொடுத்துவிட்டுப் பாராட்டி விட்டு வந்தேன். எல்லாம் நன்மைக்காக" என்றது தாய் கழுதைப்புலி.


**நீதி : நம்மை விட வலிமையானவர்களைக் கோபப்படுத்துவதைவிட அவர்களை சாந்தப்படுத்துவதே பாதுகாப்பானது.**






ஜெ.அஞ்சிதன்
தரம் 04
யாழ்ப்பாணக் கல்லூரி








ர.பௌத்தரின்
தரம் 7
யா/இந்து கல்லூரி



இ.கௌசிகா
தரம் 9
யா/உரும்பிராய் இந்து கல்லூரி



பா.ரஜிஷன்
தரம் 6
யாழ். மத்திய கல்லூரி.




சி.ஆதித்தியன்
தரம்- 8c
யா/ இந்துக் கல்லூரி.




எஸ். சோபிகா
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி.



**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org